ஓம்

திருச்சிற்றம்பலம்.

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு ௨.	மெய்கண்டான் ஆண்டு-ஏஎக ஆனித் திங்கள் 1924௵ ஜூன்—ஜூலை௴	பரல் ௬.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் தேவாரம்
இயற்கைப்பொருளழகு

(௩௯௬-ம் பக்கம் தொடர்ச்சி)

"மாழை யொண்கண் வளைக்கை நுளைச்சியர் வண்பூந்
தாழை வெண்மடற் கொய்து கொண்டாடு சாய்க்காடே."

நெய்தல் நிலமானது தலைவி பரிவு கூறுதற்கு உரிய இடமாதலால் அந்நிலத்திற்கு உரிய அன்றில் தூதுவிடும் புள்ளாகக்

கொள்ளப்படும். கழி சிறிது பிரிவுறினும் நனிமிக வருந்துதலால் புணர்ச்சி நயம் நன்குணர்ந்த அன்றில் தூதிற்கு உரியதாயிற்று. அது பின்வருந் தேவாரத் திருப்பாட்டுட் காணப்படும்.

"முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறிரே"

தலைவி கண்ணெதிரே அவள் முற்றத்திலுள்ள தாழை மடலில் ஆணும் பெண்ணுமாக அன்றில் பல முயங்கி வாழுங் காட்சி காதல் நோயைப் பெருக்குதலானும் அவை பிரிவாற்றாது வருந்தும் தன்பாற் சற்றும் இரங்கி தனது தலைவனைத் தன்னிடம் சேர்க்க முயலாது தாம் மாத்திரையே பெரும் போக நுகர்தலானும் எப்போதும் அவை இணைபிரியாது வாழ்தலால் பிரிவாற்றாமை உணராமையானும் வன்மன முடையவை என்னும் குறிப்பு அவற்றிற்கு உணர்த்தி தூதுசெல்விப்பான் 'பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்' என்றார். பிரிவுறு நோய் தென்றலால் தனக்கு மீக்கூர்தலால் அவை தூதுபோதல் இன்றியமையாத தென்பார் 'தென்றலார் புகுந்துலவும்' என்றார். பிரிவுற்றிருத்தற்குக் காரணம் தலைவன் என்பது குறிப்பான், அங்ஙனம் இருத்தற்கு இடமாகிய முல்லைக்குரிய கொன்றையணிந்த தலைவர் என்றனர்.

இனி, மருத நிலத்திணைப் பொருள் கூறும் பகுதி சில ஆயத்தக்கன. அந்நிலப் பெருஞ் செழிப்பை ஆண்டுள்ள மேதியின் வைத்துப் பின்வருமாறு இனி துணர்த்துகின்றார்.

செந்நெல்
"மேய்ந்திளஞ் செந்நெல் மென்கதிர் [illegible]
மேற்படுகலின் மேதிவைகறை
பாய்ந்த தண் பழனம்"

மேதி
"முறித்து மேதிகள் கரும்புதின் றுவியின் மூழ்கி
வெறித்துப் பாய்வயல்"

மேதி, செந்நெல், வயல், கரும்பு முதலியன போல பொய்கை, தாமரை, கழுநீர், வாளை மீன் என்பனவும் மருத நிலத்திற் குரியனவே. அகழி கடல் போல்வதாகலின் நெய்தல் நிலப் பறவையாகிய அன்னம் அதன் சார்பாக மருதத்துங் கூறப்படும். தாராவின் வகையென அன்னத்தைக் கருதி அதை மருத நிலக் கருப்பொரு ளென்பாரு முளர். இவையாவும் பின்வரும் அடிகளிற் காண்க.

தாமரை　"அரிந்த வயலரவிந்த மதுவுகுப்ப வதுகுடித்துக்
வாளை　　களித்து வாளை
　　கருஞ் சகட மிகைவளர் கரும்பிரிய வகம்
　　　பாயுங் கழுமலமே"

கழுநீர்　"தெரிந்திலங்கு கழுநீர் வயற் செந்நெல்"

பொய்கை　"பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
ஆறு　　வைகையின் வடகரை"

　　"புண்டரீக மலர்ப் பொய்கை நிலாவும் புகலியே"

காஞ்சி　"பொன்னங் காஞ்சி மலர்ச்சின்ன மாலும் பூம்புகலியே"

அகழி　"ஆவிக்கமலத் தன்னம் வைகு மகழிசூழ்
　　காவிக் கண்ணார் மங்கல மோவாக் கலிக்காழி"

முல்லை நில விலங்குகளாகிய மான், முயல் முதலியனவும், கொன்றை, குருந்து முதலிய பூ வகைகளும் முல்லைநிலச் சார்பாகக் கூறப்பட்டுள்ளன.

உழை　"கானமான் வெருவுற"

முயல்　"........புனற்படப்பைத் தடத்தருகே
　　முயலோட வெண்கயல் பாய்தரு"

கொன்றை　"கொன்றையந் தென்றலார்ந்த
　　............புறவார் பனங்காட்டூர்"

குருந்து　"குருந்து முல்லை கொடிவிடும்"

பாலை நெய்தலாகப் பாடிய திருநனிபள்ளித் தேவாரத்தி லொழிய பிற இடங்களில் அதன் வருணனை காணப்படுதல்

அரிது. ஆயின் பாலை யாழென்பது பல இடங்களிலும் விதந் தோதப்படுகிறது.

(உ-ம்) "பாலையாழ்ப் பாட்டுகந்தான் பசுபதீச் சரத்தானே"

"பாலையாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே"

பாதிரி, மரா, குரா என்னும் பாலை நிலத்திற்குரிய மரங் கள் சிற்சில இடங்களில் கூறப்படுகிறது.

(உ-ம்) 'கரியினொடு பூவையரியினமும் வெருவுகாளத்திமலையே'

மா-யானை புலி "ஏனத்திரளோ டினமான் கரடி யிழியும்விரிசாரல்"
கரடி, பன்றி

புள்-கிளி. "ஏனமின மானினொடு கிள்ளைதினை கொள்ள
வெழிலார் கவணினாற்
கானவர்மா மகளிர் கனகமணி விலகு
காளத்தி மலையே"

மயில் "மயில்புல்கு தண்பெடையோ டுடனும் வண்சாரல்"

அகில்,ஆரம் "சந்தமாரகிலொடு சாதிதேக்குமர முந்துமாமுகலி"

தேக்கு திமில் "தேக்குந்திமிலும் பலவுஞ் சுமந்துந்தி"
முதலிய "நுகாரமோடேலம் மணி"

காந்தள் "மதுவாய செங்காந்தண் மலர்நிறையக் குறையில்லா
மூங்கில் முதுவேய்கண் முத்துதிரும் பொழில் முதுகுன்றம்"

வேங்கை "வேங்கைகணிலாவு காளத்திமலையே"

அருவி,சுனை "அலைகொள் புனலருவி பலசுனைகள் வழியிழிய"

குறவர் "திறங்கொண் மணித்தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற் குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி சிலவிலகி முத்துலைப்பெய்"

திணைமயக்கத்திற்கு எடுத்துக்காட்டுக்களும் மிகுதியாக இவ் வாசிரியர் தேவாரத்துட் காணப்படும்.

மருத நெய்தல் "ஆகரஞ் சேரிப்பி முத்தை யந்தண் வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்து"

குறிஞ்சிமுல்லை "செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறி
கொல்லை முல்லை மெல்லரும் பீனுங் குற்றாலம்"

குறிஞ்சி நெய்தல் "நீல நெய்தல் தண் சுனை சூழ்ந்த நீள்சோலை"

குறிஞ்சி **மருதம்** "மும்மென் றெழுமருவித் திரள்வரை பற்றிட
வுரைமேல்
விம்மும் பொழில் கெழுவும் வயல் விரிநீர் வியலூரே"

குறிஞ்சி பாலை "குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை"

பாலை நெய்தல், "குரவங் குருக்கத்தி கள்புன்னைகள் ஞாழன்"

முல்லை மருதம் "கொங்கார் கொன்றை வன்னிமத்தங்குளிர் **பொய்கை.**

முல்லை நெய்தல் "முறிகொணுழன் முடப்புன்னை முல்லை முகை
வெண்மலர்"

பாலை மருதம், "**மாவஞ்** சூழ் பொழி லேகம்பம்
குரவப் பாவை முருகமர் சோலை"

குறிஞ்சி, மருதம், "கருமை கொள்வடி வொடு சுனை வளர்குவளைக்
நெய்தல், பாலை　　கயலினம் வயலிளவாளைகளிரிய
எருமைகள் படி தரவிளவனமாலு மிடைச்
சுரமேவிய விவர்வண மென்னே"

குறிஞ்சி, நெய்தல் "கோங்கிள வேங்கையுங் கொழுமலர்ப் புன்னையும்
முல்லை, பாலை　　தாங்குதேன் கொன்றையுந் தகுமலர்க் குரவமும்"

(தொடரும்)

கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M.L.

மங்கைபங்கன்

சென்ற இருதிங்களாய்ச் செந்தமிழ்ச் செல்வியில் வெளி வந்த "மாதிருக்கும் பாதியன் அல்லது அர்த்த நாரீசுவரர்" என்னுங் கட்டுரையை மிக்க ஆவலுடன் படித்து வந்தேன். அக்கட்டுரை வைகாசித் திங்களோடு முடிவிற்கு வந்தமையால் மேற் கண்டிருக்குந் தலைப்பின் கீழ் யான் அவ்வப்போது குறித்து வைத்திருந்த சில கருத்துக்களை எடுத்துப் பார்க்க நேரிட்டது. திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தமது உரையிற் கூறாதெஞ்சிய சில பகுதிகளை இங்கு தொகுத்து மொழிதல் மிகையாகாதென்ற துணிபுடன் இச் சிற்றுரையை வரைகிறேன்.

கைலாயத்திற் பரமனும் பார்வதியு மொருநாள் நெருங்கி வீற்றிருக்கையில் சிவனை வணங்கவந்த பிருங்கு முனிவர் அங்கு தோன்றினார். அழற் கண்ணானும் கயற் கண்ணியும் ஒன்றி யிருந்ததால் ஒரு வண்டின் வடிவெடுத்து அவர்களிருக்கையைத் துளைத்து முக்கணனை மாத்திரம் பிருங்கு முனிவர் தொழுது செல்ல, அது கண்ட மலைமகள், "பிருங்கு முனிவ ரங்ஙனஞ் செய்ததேன்?" என்று நாயகனை வினவ, அவர், "இம்மை நலத்தை விழைந்தவர் உன்னையும், மறுமைப் பயனை விரும்பியவ ரென்னையுந் தொழுகின்றனர். மறுமையை நாடிய பிருங்கு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றான்," என விடை பகர்ந் தார். இதைச் செவியுற்ற பைங்கொடி தன் கணவனை நோக்கி, "ஐய, உனக்குள்ளதி லெனக்கும் பங்கிலையோ?" என இரங்கிக் கேட்க, விரிசடைக் கடவுள் அவள் கூறியதற் கிணங்கித் தன் னுடலில் இடது பாதியை அவளுக் கீந்து, ஆணும் பெண்ணுங் கலந்த அர்த்த நாரீசுவர வடிவமானார். இது புராண வரலாறு. இவ் வரலாறு எத் தன்மைத் தாயினும் இதிற் காட்டப்படும் அர்த்த நாரீசுவர வடிவம் யாவராலும் உற்று நோக்கி உணரத் தகு மொன்றாகும். இஃது ஆணும் பெண்ணு மலியு மல்லாத நிலைமை போலும். அதுவே கடவுட்டன்மை யாகுமென்று

கூறுவாரு முளர். ஒன்றும் ஒன்றும் கூடின் இரண்டாகு மென்பது கணக்குணர்ந்தோர் துணிபு. ஒன்றும் ஒன்றும் ஒன்றி ஒன்ருகும் அர்த்த நாரீசுவர நிலையைக் கணிதவல்லார் எங்ஙனங் கருதுவரோ அறியேன்.

நிற்க, அர்த்தநாரீசுவர வடிவத்தில்; ஆண் வலத்திலும் பெண் இடத்திலும் அமைந்து நிற்க வேண்டியதே னெனச் சிறிது ஆராய்வோம். மக்களுக்குள்ள கைகளிரண்டில் ஒன்று மற்றொன்றைவிடச் சிறப்புடைய தென்று கருதப்படுகின்றது. இச் சிறப்பு யாதாயினு மொன்றைச் செய்யுங்கால் அவைகளிற் காணப்படும் வேற்றுமையாற் பிறப்பது. கண்ணிமைகளில் மேலிமை அசையும் பெற்றியுடையது; கீழிமையோ அசையாமல் நிற்பது. இங்ஙனமே, கைகளினு மொன்று அசைந்து திரிந்து தொழிலியற்றும்; மற்றொன்று அதற்கு இசைந்து இருந்து தொழிலியற்றும். திரிந்து செய்யுங் கைக்கும் இருந்து செய்யுங் கைக்கு முள்ள வேற்றுமை விளங்கும் பொருட்டு அவைகளுக்கு வெவ்வேறு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. வலக்கை என்பது வலியையுடைய கை என்று பொருள் தரும். இடக்கை யென்பது, அதிகமா யசையாது தன்னிடத்திலேயே இருக்குங் கை என்று பொருள் கொள்ள இடந் தரும். ஆதலின், சென்று செலுத்துங் கை வலக்கை; நின்று நடத்துங் கை இடக்கை. ஒன்றின் றன்மை வன்மை யெனவும் மற்றொன்றின் றன்மை மென்மை யெனவுங் கூறுதல் தவருகாது. இதனுல், வல்பா லாணும் இடபாற் பெண்ணுமாய் விளங்கும் மங்கைபங்கன் வடிவம் ஒருவாறு விளக்கமடையும்.

கணவனு மனைவியும் புறத்திலிருவரும் அகத்தி லொருவருமாவர் என்பது யாவரு மேற்றுக்கொள்ளு முண்மை.

"......................................
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம்..........."

என்னுங் கூற்றை மறுப்பாரில்லை. இக் கருத்தொன்றுதலைப் பசு மரத்தாணிபோற் பதிய வைத்தற்குப் பச்சைநிறப் பார்வதியும் பவளநிறப் பரமனும் இருபாதியாகி ஒருவராயினர் போலும். உளத்தில் நிகழும் ஒற்றுமை மங்கை பங்கன் வடிவத்தில் உடலிலுந் தோன்றுகின்றது. முகத்துக் கண்கொண்டு பார்ப்பார்க்கு கணவனு மனைவியும் பிரிந்து இருவராய்த் தோன்றுவர். அகத்துக் கண்கொண்டு நோக்கிடின் இருவரும் ஒருவரே யென்பதில் ஐயமில்லை. அறம் பொரு ளின்பம் வீடு என்று பெரியோரால் சிறப்பித்துக் கூறப்படும் வாழ்க்கைப் பயன்களை யடைவதற்கே இல்லற மென்று நல்லோரேத்துஞ் செந்நெறி யமைக்கப்பட்டது. இந் நெறியைப்பற்றி யொழுகுவதற்குக் கணவனு மனைவியும் முறையே வலதிடது கைகள்போ லிருக்கிறார்கள். சுற்றித் திரிந்து பொருளீட்டி வருவதில் கணவன் வலதுகையை ஒத்திருக்கின்றான். அங்ஙனம் ஈட்டிக் கொணர்ந்த பொருளைப் பேணியிருந்து செலவிடுவதில் மனைவி இடக்கையை ஒத்திருக்கிறாள். வலிமையைக் கையாடி குன்றாத ஊக்கத்துடன் உழைப்பது ஆணின் பெற்றி. சொல்லினுஞ் செயலினும் அமைதியும் மென்மையும் விளங்க யாவற்றையும் இனிது முடிப்பது பெண்களுக் கழகு. வாழ்க்கையின் வெளிப்பகுதியில் தோன்றுகிறவன் கணவன், உட்பகுதியில் விளங்குகிறவள் மனைவி. காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பிக் காய்வதுபோல் ஆண்மையும் ஆற்றலுஞ் செற்றமும் நிறைந் திலங்குவது ஆணின் பண்பு. தண் கதிர் மதிபோற் குளிர்ந்து அமர்ந்து திகழ்வது மங்கையர் தன்மை. அர்த்த நாரீசுவர வடிவத்தில் சூரியன் வலக்கண்ணும் சந்திரன் இடக்கண்ணும் அமைந்திருக்கின்றனவென் றறைவர். மேற் கூறியதைக் கொண்டு இதன் பொருளை நோக்கி மகிழ்க.

இனி, உடலிற் பாதி யுமையவளுக்கீந்தான் பரமன் என்பதனாற் பெறப்படும் பொருள் யாதென நோக்குவாம். மேல் நாட்டாருடைய கொள்கைகளுக் காதாரமாயிருக்கும் விவிலியத்தில் (The Bible) முதலிற் கடவுளா லமைக்கப்பட்ட பெண்,

ஆதியிற்றோன்றிய மகனின் விலாவெலும்பிலிருந் தாக்கப்பட்டா ளென்று விளம்பியிருப்பது இங்கு ஆழ்ந்து நோக்கத்தக்கது. மக்களுடம்பில் விலாவென்பது மேலிருப்பதென்றாவது கீழிருப்ப தென்றாவது சொல்லமுடியாததோர்பாகம். அங்கிருந்தவளாக்கப் பட்டமையின் அவள் கணவனுக்கு உயர்ந்தவளுமல்லள் தாழ்ந் தவளுமல்லள் என வெண்ணக் கிடக்கிறதென்று கூறுகின்றார் கள். ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள ஒப்பு நிலைமை, உடலிற் பாதியுமையவளுக் கீந்தான் பரமன் என்றதனால் இன் னுந் தெளிவாய் விளக்கப்படுகின்றது. இல்லறமாகிய சகடத்தை இழுத்துச் செல்லும் எருதுகள் போலிருக்கும் நாயகனும் நாயகியும் ஏறக்குறைய ஒரே நிலைமையிலிராவிடின் எங்ஙன மச்சகடம் முட்டின்றி முன்னேறிப் போகும். தலைமகனுந் தலை மகளும் 'ஒரு தன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனுமன்பு முதலியவற்றாற் றம்முளொப்புமையுடை யார்' ஆதல்வேண்டுமென்று தமிழ் நூல்க ளெடுத்துக் கூறு வதை யறியாதவர் தமிழறிந்தவராவரோ? ஒரு வண்டியிற் பூட்டு வதற் கென வாங்கிய இரு காளைகளிலொன்று பருத்துக் கொழுத்தும் மற்றொன்று இளைத்துமெலிந்து மிருக்குமாயின் பிறர் நகைக்க வண்டியுடைவதற்கு வேறு வழிவேண்டுவதில்லை. பருமனிலும் பலத்திலுமவை ஒத்திருக்கவேண்டு மென்பது சொல்லாமற் பெறப்படும். இல்லறமாகிய சகடத்திற்கு இவ் வொற்றுமை இன்னுமதிகமாய் வேண்டுமென்பதைக் கற்றோர் தெற்றெனக் காண்பார். ஆனால், இதில் அறியாமையெனும் பாவிக் கடிமைகளாகிப் பிழை பல வியற்றி இன்னல்களு மிக் கட்டுக்களு முடுகிவரப் பாம்பின் வாய்த் தேரைபோற் பரித விப்போ ரநேகர்.

நிற்க, அழற்கண்ணுடைய பிரான் பவளமேனிய னுயதற் கும் பார்வதி பச்சை நிற முடையவ ளாயதற்குங் காரண மென்னவென வினவுவாம். இதற்கு முன் செங்கதிரையும் தண் கதிரையும் பற்றிக் கூறியதை நினைவிற் கொண்டுவர நிறங் களின் காரண மொருவாறு புலப்படும். ஞாயிற்றின் கதிர் ஏழு வெவ்வேறு நிறங்கள் பெற்ற ஒளிகளா லமைந்த தென்பது

கற்று ணறிந்ததே. இவ்வேழு நிறங்களில் இள நீல நிறம் (Violet) இடதுபக்கத் திறுதியிலும், செம்மை (Red) நிறம் வலது பக்கத்து ஈற்றிலும் அமைகின்றன. இதனுலும் வலது புறம் ஆணும் இடது புறம் பெண்ணுமாய்த் தோன்றும் அர்த்த நாரீசுவர வடிவையறிக. அன்றியும், மரஞ் செடி கொடிகளின் இலைகள் முதிரா திருக்கும்போது பசுமை நிறத்தையும் முற்றிப் பழுக்கும்போது மஞ்சள் அல்லது செம்மை நிறத்தையும் பெறுவதைக் கண்ணுறுங்கால் இளமையைப் பசுமை நிறத்தோடும் முதிர்ச்சியைச் செந்நிறத்தோடும் ஒப்பிடுதல் பொருந்தும். உண்மையி லிக்கருத்து நம் மெல்லோர்க்கு முளது. அறியாத குழவியை 'பச்சைக் குழந்தை' யென்றும், வயது முதிர்ந்தவனைப் 'பழுத்த கிழவன்' என்றும் நாம் சொல்வது அக்கருத்தை உட்கொண்டே. சத்திக்குஞ் சிவத்துக்கு மிதைப் பொருத்திப் பார்க்க உண்மை யொன்று விளங்கும். எல்லா உயிர்க்கு மிறுதியாகிய சிவனைப் பவளநிற முடையோனெனப் பாவித்தல் மிகவும் போற்றுதற் குரியதேயாகும். ஆக்கலு மழித்தலு மிதி லடங்கும். யான் சித்தாந்த வறிவிற் சிறு குழந்தையாதலின் இதைப்பற்றிப் பெருகக் கூற அஞ்சுகிறேன்; அக்கலையில் வல்லார் இதிலின்னு மாழ்ந்த பொருள் காண்பாரென நம்புகின்றேன். அமெரிக்க சர்வ கலாசாலைகளில் முதன்மை பெற்று விளங்கும் ஹார்வர்டில் (Harvard) தத்துவ சாத்திர தலைமைப் புலமை யுடையாராய்த் திகழும் ஜேம்ஸ் (Professor James) என்பவர், உபாத்தியாயர்களுக்கென் றெழுதிய ஒரு நூலின் (Talks to Teachers) ஒன்பதாம் பகுதியில் பின் வருமாறு வரைந்துளார். (Chapter IX, The Association of Ideas. "In witty, imaginative minds, on the other hand, the routine is broken through with ease at any moment; and one field of mental objects will suggest another with which perhaps in the whole history of human thinking it had never once before been coupled. The link here is usually some analogy between the objects successively thought of,—an analogy often so subtle that,

although we feel it, we can with difficulty analyse its ground; ***as where, for example, we find something masculine in the colour red and something feminine in the colour pale blue***, or where, of three human beings' characters, one will remind us of a cat, another of a dog, the third perhaps of a cow."

'செந்நிறம் ஆண் தன்மையையும் இளநீல நிறம் பெண் தன்மையையும் எங்ஙனமாகவோ குறிப்பா லுணர்த்துகின்றன.' இதனை நான் முதலிற் படித்தபோது அளவிடலாகா வியப்பு முவப்பு மொருங்கே யடைந்தேன். பிறர்க்கு மஃது உவப்பை யூட்டு மென்று இங்கு வெளியிடலானேன். எனது அளவு கடந்து யாதாயினு மொன்றை யான் மொழிந்திருப்பின் பொறுத் திடுக.

க. ப. சந்தோஷம் B.A., L.T.,

இலக்கண விளக்க உரையாளர் நூலாசிரியரே

(௱௬௩-ம் பக்கத் தொடர்ச்சி)

தொல்காப்பியச் சூத்திரங்கள் இலக்கண விளக்கத்தில் அமைந்து கிடக்கின்றன என்பது பின் குறிப்பதனால் அறிய லாகும்.

தொல்காப்பியம்

(1) **எழுத்து. பிறப்பு. ௬**

தத்தந் திரிபே சிறிய வென்ப.

(2) சொல். **கிளவியாக்கம். க**

உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன்
[சொல்லே.

இலக்கணவிளக்கம்

எழுத்தியல். க௪

தத்தந் திரிபே சிறிய வென்ப.

பெயரியல். ௪

உயர்திணை யென்மனார் மக்கட்
[சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே.

(3) சொல். கிளவியாக்கம். ௪
பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந்தந் தமக்கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் [திசைக்கும்

பெயரியல். எ
தெய்வமும் பேடுமா மவ்விரு பகுதியு
மிவ்வென வறியுமந்தந் தமக்கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் [திசைக்கும்

(4) சொல். எச்சவியல். ௩
ஒருபொருள் குறித்த வேறு [சொல்லாகியும்
வேறுபொருள் குறித்தவொரு [சொல்லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

பெயரியல். கரு
ஒருபொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறுபொருள் குறித்த வொரு [சொல்லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி

இவை தாவிபுலாக நயம்பற்றிக் காட்டப்பட்டன.

இனி, வைத்தியநாத நாவலர் தமது உரையில் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் முதலியோருரைகளை அமைத்துக் கொண்டமையும் அந் நயம் பற்றிக் காட்டப்படுகின்றது.

இலக்கணவிளக்கவுரை

எழுத்தியல். ௰௪

(1) ஒவ்வொரு தானங்களுட் பிறக்கின்ற எழுத்துக்களைக் கூட்டிக் கூறினே மாயினும் நுண்ணுணர்வா ளோராயு மிடத்துத் தம்முடைய வேறுபாடுகள் சிறியவாகவுடைய வென்று கூறுவர் புலவர். அவ் வேறுபாடுகள் அறிந்து கொள்க.

(2) பெயரியல். ௪௩

...மாணுக்கற்கு அறிவு கொடுத்தானென்பது போலக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான் கட் செல்லாது ஆண்டுத் தோன்றுதலும் மாணுக்கற்கு நூற்பொருளுரைத்தான் என்பது போலக் கொடைப் பொருளிற் குறித்த சொல்லானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறுதலும்......

இளம்பூரணருரை

எழுத்து. பிறப்பு. ௬

எழுத்துக்களொரு தானத்துக் கூடிப் பிறக்கு மெனப்பட்டன. அவ்வாறு கூடிப் பிறப்பினும் தத்தம் வேறுபாடுகளைச் சிறிய வேறுபாடுண்டென்று சொல்லுவர். அவ் வேறுபா டறிந்து கொள்க.

சேனாவரையருரை

சொல். வேற்றுமையியல். க௪

மாணுக்கற்கு நூற்பொருளுரைத்தா னெனக் கொடைப் பொருளவாகிய சொல்லானன்றிப் பிற வாய்பாட்டாற் கூறப்படுவனவும், மாணுக்கற் கறிவு கொடுத்தானெனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும்......

(3) எழுத்தியல். அ

...'அகர முதல வெழுத் தெல்லா மாதி, பகவன் முதற்றேயுலகு' எனத் திருவள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும் கண்ணன் எழுத்துக்களுள் அகரமாய் நின்றேன் யான் என உண்மை கூறிய வாற்றானும் இறைவன் எல்லாப்பொருளின்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமாறு எல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகரமும் எல்லா வெழுத்தின் கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்ததாகலான்......

எழுத்தியல். க

இவ்வதிகாரம் எழுத்துணர்த்தினமையான் எழுத்ததிகார மென்னும் பெயர்த்து......எழுத்தென்றது அதன் இலக்கணத்தை. அதிகாரமென்றது முறைமை. இவ்வதிகாரத்துள் ௰வகை யோத்தினான் எழுத்திலக்கணம் உணர்த்துகின்றார். அவற்றுள் இம் முதலோத்து.....எண் பெயர் முதலிய பத்திலக்கணமும் உணர்த்திற்றாகலான் எழுத்திய லென்னும் பெயர்த்து.

நச்சினார்க்கினியருரை

எழுத்து. மொழிமரபு. ௧௩

...இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் றன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது, 'அகர முதல' வென்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே யெனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க.

மயிலைநாதருரை

எழுத்தியல். க

...இவ்வதிகாரம்...எழுத்திலக்கண முணர்த்தினமையின் எழுத்ததிகார மென்னும் பெயர்த்து... அதிகார மென்றது முறைமை. இவ வதிகாரத்துள்...எழுத்திலக்கணம்......௰வகை யோத்தினான் உணர்த்தினா னென்க...இவ்வோத்து எண் பெயர் முதலான எழுத்திலக்கணம் பத்தும் உணர்த்திற்றாகலான் எழுத்திய லென்னும் பெயர்த்து......எழுத்து என்றது எழுத்திலக்கணத்தை.

இனிச் சுவாமிநாத தேசிகரும் மாதவச் சிவஞான சுவாமிகளும் இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத நாவலரே உரையாளரென்று கொண்டது பிழையெனத் தாம் முடிவு செய்ததற்கு ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் இரண்டு காரணங்கள் கூறுகின்றார்கள் அவையாவன :—

(க) 'புள்ளி யில்லா வெல்லா மெய்யும்' என்னும் எழுத்தியற் சூத்திரவுரையில் 'உயிரும் மெய்யுங் கூடுகின்ற கூட்டத்தினை எல்லா மெய்யு மென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும்' என உரை யெழுதினர் நூலாசிரியரது கருத்தில் ஐயுறவு தோன்றக் கூறுதல்.

(உ) நூல் செய்தவர் படர்க்கையில் வைத்துக் கூறப்படுகின்றனர். யாண்டுந் தன்மை யிடத்தாற் கூறப்படவில்லை.

என்பனவாம்.

இலக்கண விளக்கவுரையிற் பெரும்பாலன பண்டை யுரை யாசிரியர்கள் கூறிய உரைப் பகுதிகளே யென்பது முன்னர்த் தாலிபுலாக நயம்பற்றித் தெளிவாகக் காட்டப்பட்டது. ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் எடுத்துக் காட்டும் உரைப்பகுதியாகிய முதற் காரணம் பண்டை உரையாசிரியர் உரைப்பகுதியா யிராமலிருப்ப தாலுல்மட்டும் அக்காரணம் வியவகாரத்திற்கு வலியுடையதாகும் பண்டையாசிரிய ருரைப்பகுதியாயின் அது வலியிழந்து நிற்கும். அவர்கள் காட்டிய அவ்வுரைப்பகுதியோ, தொல்காப்பியம், எழுத்து நூன்மரபு மீஎ வது சூத்திரமாகிய 'புள்ளி யில்லா வெல்லா மெய்யும்' என்று தொடங்குஞ் சூத்திரத்திற்கு இளம் பூரணர் கூறிய வுரைப்பகுதியேயாம். அம்மட்டோ, அவ்வுரைப் பகுதிக்கு மேற்கூறப்பட்ட 'இவ்வாற்றான் உயிர்மெய்யென்பதனை ஒற்றுமை நயங்கொள்வழி உம்மைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவும், வேற்றுமை நயங்கொள் வழி உம்மைத்தொகையாகவுங்கொள்க' என்பதும் இளம்பூரணர் கூறியவுரைப் பகுதியேயாம். இதனால் இளம்பூரணருக்குத் தொல்காப்பியர் கருத்தில் ஐயுறவு தோன்றிய தென்பது பெறப் படுவதேயன்றி, ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் கருதும் உரையாள ராகிய சாத்தனர் அல்லது தேவதத்தனுர்க்கு வைத்திய நாத நாவலர் கருத்தில் ஐயுறவு தோன்றியதென்பது பெறப்படுத வில்லை. வைத்தியநாத நாவலர் இலக்கண விளக்கச் சூத்திர மியற்றும் பொழுது தம்மைத் தொல்காப்பியரையும் பவணந்தி யாரையும் சேர்த்து உருக்கிவார்த்த பிண்டமாகவும், உரையியற் றும் பொழுது தம்மை இளம்பூரணர் சேனவரையர் நச்சினர்க்

கினியர் மயிலை நாதரென்னு மிவ்வனைவரையுஞ் சேர்த்து உருக்கி வார்த்த பிண்டமாகவும் பாவித்துக் கொண்டாரென்பதே பெறப் படுவதாம். பாயிரத்துச் சதாசிவ நாவலர் 'முன்னோர் நூலின் முடிபு நோக்கிச், சோல்லும் போருளு மோல்வன தழீஇ' என்று கூறுவதும், அதன் உரை 'முன்னோர் கூறிய நூல்களினுடைய முடிபினை ஐயந்திரிபற ஆராய்ந்து அவரோதிய சூத்திரத்துள்ளும் அவற்றின் போருளுள்ளும் ஈண்டைக்குப் போருந்துவனவற்றை அணைத்துக்கோண்டு என்று வருவதும் மேற்கூறிய வுண்மை யைத் தேற்றுவனவாகும்.

பிற வுரையாசிரிய ருரைப் பகுதியை அவ்வாறே எடுத் தமைக்கப் புகுவார் ஒருவர் தம்மைப் படர்க்கையிற் கூறுதல் பொருந்துமேயன்றித் தன்மையிற் கூறிச் செல்லுதல் பொருந்தா தென்பது யாவரும் எளிதின் அறிவதொன்று. இதனால் ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் கூறிய இரண்டாவது காரணமும் பயப்பாடின்றி ஒழிந்ததன்றியும், அவர்கள் "நூலாசிரியரே உரைகண்டாருமாயின் தன்மையாலன்றோ கூறியிருத்தல் வேண் டும். பிரயோக விவேக முடையாரும் இலக்கணக் கொத்து நூலாரும் 'இவ்வாறு கவிதோறும் உரைக்கு முன்னாகப் பின்னாக உரைச் சூத்திரமுஞ் செய்தாம்' 'தொல் காப்பியம் ஐந்தனையு முணர்த்தலிற் கடலென்றும்' என்றிங்ஙனம் தாமே நூலும் உரையுமியற்றியோ ரென்பது தோன்றத் தன்மையாற் கூறிச் செல்லுதலுங் காண்க" என்பது முதலாகப் பலபடப் பாரித்துக் கூறியன வெல்லாம் வெறும் போலியாயின.

இதுகாறுஞ் செய்த ஆராய்ச்சியால் இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத நாவலரே அதன் உரையாள ரெனச் சுவாமிநாத தேசிகரும் மாதவச் சிவஞான சுவாமிகளும் கூறியது அகச்சான்று புறச்சான்றுகளால் நிலை நிறுத்தப் படுகின்ற தென்பதும் ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் செய்த ஆராய்ச்சி பிழைபட்டதென்பதும் விளக்கப்பட்டன.

அன்றியும் 'இலக்கணவிளக்கவுரையாளர்யார்' ரென்றெழுந்த வினாவுக்கு இன்னாரென்று விடையிறுப்பதன்றி வேறாவரென்ற

அளவிற் கூறிவிடுத்தல், ஒரு பழத்தைச் சுட்டி இப்பழம் யாது என்றெழுந்த வினாவுக்கு இஃதெலுமிச்சம் பழத்தின் வேறாய தென்ற அளவிற் கூறிவிடுத்தல் போல்வதோர் செப்புவழுவு மாயிற்று. இலக்கணவிளக்க நூலாசிரியரும் உரையாளரும் வேறுவேறாவரென்று விடுத்தல் கருதுவோர் அதற்கேற்ப இலக்கணவிளக்க நூலாசிரியரே அதன் உரையாசிரியரா என்று வினா எழுப்பிக் கோடல் வேண்டும்.

மேலும் ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் இலக்கண விளக்கவுரை யியற்றினார் சதாசிவ நாவல ரென்று வாய்மொழியளவிற் கூறு வாரை ஆதரிக்க வந்த விடத்து 'அதனை நேரிலறிந்தாரிட மிருந்து வழிவழியாக வந்த செய்தியோ அன்றி நூலுரையின் கட் காணப்படும் கருத்துக்களோ அவர் அங்ஙனங் கூறுதற்குக் காரணமாதல் வேண்டும்' என்று பரிந்து கூறினார்கள். இப் பரிவை 'என்கண்காண' என நேரிலறிந்து வைத்தியநாத நாவலரே உரையுமெழுதினா ரெனக் கூறும் சுவாமிநாத தேசிகரிட மும் அவ்வாறு நேரிலறிந்தாரிடமிருந்து வழிவழி வந்த செய் தியை மேற்கொண்டும் நூலுரைகளிற் காணப்படுங் கருத்துக் களை நுணுகி யாராய்ந்தும் அவ்வாறு கூறும் மாதவச் சிவஞான சுவாமிகளிடமும் நீளச் செலுத்தின் அவர்கள் பிழைபடார்கள்.

முடிவாக ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் 'உலகின்கண் ஒவ்வொரு வரலாறும் எவ்வளவு விரைவிலும் எளிதிலும் பிறழ்ச்சி யடை யக் கூடுமென்பதற்கும் அவையிற்றை எங்ஙனஞ் சிக்கறுத்து உண்மை காணலாகுமென்பதற்கும் ஓர் எடுத்துக் காட்டாகுந் துணையே இஃதெழுதலாயிற்று' என்று கூறினமைக்கு நாம் பெரிது மிரங்குகின்றே மாயினும் அவர்கள் 'மறைந்து கிடக்கும் பழைய உண்மைகளை யாராய்ந்து வெளிப்படுத்தலே மிக அருமையுடைத்தா யிருப்ப, எவ்வகையான பற்றுக் காரணமா கவும் மேலுமேலும் உண்மைகளை மறைத்தும் திரித்தும் செல் லுதல் அறிவுடைமைக்கு அழகாகா' தென்று கூறினமைக்கு நாம் கழிபேருவகை பூக்கின்றேம்.

வி. சிதம்பரராமலிங்க பிள்ளை.

சைவ சமய வளர்ச்சிக்காக நாம் செய்ய வேண்டிய வேலை யாது?

இவ்வானித் திங்கள் எட்டா நாளன்று திருக்குற்றாலத் திருத்தலத்தில் குழுமிய தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சங்கத்தின் நிறை வேற்றக் கூட்டத்தில், காரைக்குடி திரு வாளர் அரு. சோமசுந்தரச் செட்டியா ரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கக் குறிப்பின் துணைகொண்டு விரித் துரைக்கப்பட்டது:—

சைவப் பெருமக்களாகிய நாம் நமது சமய வளர்ச்சி கருதி இந் நாளில் செய்யவேண்டிய வேலைகள் பலவுள. அவ் வேலை களை நிறைவேற்றுதற்கு முன் வந்து பணி செய்து பயன் விளைத்தற்குரிய தொண்டர்கள் பல ரிலர். இதுகாலை அத்திபூத் ததுபோல், ஆங்காங்கு ஒரு சில மெய்யன்பர்கள் சமயப் பிர சாரஞ் செய்து வருகின்றார்கள். பெரும்பாலோர் இன்னுந் தங் கள் கருத்தைப் பணி செய்தலிற் பதிக்கவில்லை. சைவ மகா சபைகள் பலவற்றில் சைவப் பெருமை பெரிதும் பேசப்படு கின்றதே யொழியச் சைவப் பணி நன்கு வலியுறுத்திப் பேசப் படவில்லை. சொற்பொழிவாளர்களும் கேட்டின்புறுவோரும், சொல்நயம் பொருள்நயம் முதலிய நலன்களையே நாடுகின்றார் களே யன்றி, வேலை நலத்தை நாடுகின்றார்களில்லை! இவ்வாறு சமயச்சபைகள் பல ஆண்டுக் கொருமுறை இன்பவிழா வெடுத்து மகிழ்வதோடு அமைந்து விடுகின்றன. பின்னர் அயர்ந்து உறங்க ஆரம்பித்து, அடுத்த ஆண்டின் தொடக்கத்திற்றான் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடுதற்காகக் கண் விழிக்கின்றன. ஆனால் பயனற்ற அறிக்கையேடுகளை மட்டும் அழகாகத் தயாரித்து அச் சிட்டுப் பரப்பிவிடுகின்றன. இஃது ஓர் பெருங்குறையாகும். முதற்கண் நாம் இக் குறையினை யொழித்தற்கே முயலுதல் வேண்டும். சமயச்சபைக ளனைத்தினையும் சமயத்தொண்டு செய் வதில் ஈடுபடுமாறு செய்தல் வேண்டும். ஒவ்வொரு சபையையும்

சார்ந்துள்ள அங்கத்தின ரனைவரும் சமயத்தொண்டராக விருத்தல் வேண்டும். சந்தாப்பணம் ஒன்றைமட்டும் கருதிச் சங்கத்தில் அங்கத்தினர் எண்ணைப் பெருக்குதலாகாது. சமயத்தொண்டு செய்ய முன்வருவோரே அங்கத்தினராக விருத்தல் வேண்டும். மற்றவ ரனைவரையும் நன்கு அபிமானிகளாகச் சேர்த்துச் செல்வநிலையைப் பெருக்கிக்கொள்ளலாம். இவ்வழிபற்றிப் பணி செய முன்வரும் திருக்கூட்டங்களும் திருத்தொண்டர்களுமே யாண்டும் பெருகுதல் வேண்டும். ஒரு திருக்கூட்டத்திற்கு ஐந்து திருத்தொண்டர்கள் இருந்தாலும் போதும். இத் திருக்கூட்டங்களுக்கு மிக அதிகமான செல்வ நிலையையுந் தேட வேண்டுவதில்லை. திருத்தொண்டர்கள் மட்டும் தன்னலங் கருதாது, பொதுநலம் நாடுபவராக, இலவசப்பணி செய்வாராக விருத்தல்வேண்டும். அன்னார் நாடோறும் இவ் வேலையையே செய்தல் வேண்டுமென்பதில்லை. ஒருமாதத்தில் பத்து நாட்கள் இப் பிரசார வேலையிற் செலவழித்தாற்போதும். முக்கியமாகத் தொண்டராவா ரனைவரும் இறை சிவன் திருவருளை முன்னிட்டு, ஒற்றுமையோடும் நிறைந்த ஊக்கத்தோடும் பணிசெய்து அன்பு நெறியினை வளர்க்கத்தக்க பேருணர்வுடையோரா யிருத்தல் வேண்டும். அன்னோர் உடம்பிலுள்ள இரத்த நாளங்க ளனைத்தினும் சைவசித்தாந்தத்தேன் கலந்த இரத்தவெள்ளம் கொதிப்புற்றோடுதல்வேண்டும். எல்லோரும் பெரும் பண்டிதர்களாக விருக்கவேண்டும் என்பதில்லை. பிரசாரவேலை செய்தற்குப் போதியவளவு பிழையறச் சைவசித்தாந்த நுண் பொருள்களை அறிந்து கொண்டவர்களாக விருந்தாற்போதும். நான் எனும் அகந்தையின்மையும் அடக்கமும் அவசியம் அன்னோர்க்கு அணிகலன்களா யிருத்தல் வேண்டும். உண்மை, உறுதி, அஞ்சாமை, பொறுமை, நல்லொழுக்கம் முதலிய நறுங்குணங்களுக்கு அன்னார் எடுத்துக்காட்டா யிலங்குதல் வேண்டும். அன்னோர் சிரங்களில் நால்வர் பொற்றாளும், கரங்களில் சைவ சாத்திரங்களும் தோத்திரங்களும் திகழ்தல் வேண்டும். சிறப்பாக மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் திருமுறை பன்னிரண்டும் அவர்களுள்ளத்தில் ஊறித் ததும்பிப் பொங்குதல் வேண்டும்.

பணிசெயுங் காலத்து, "பயன் பயன்" என்று பதறுது பணியைச் செவ்வனே செய்துகொண்டிருத்தல் வேண்டும். பணியைச் செவ்வனே செய்துகொண்டு சென்றால் பயன் விளைந்தே தீரும். இவ்வாறு, "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் இன்ப வாக்கை முன்னிலைப் படுத்திக்கொண்டு, தொண்டராவா ரனைவரும் நாட்டினைக் கலக்குதல் வேண்டும். இளைஞர் தான் பெரிதும், "நான் வருகின்றேன், நான் வருகின்றேன்" எனத் திருக்கூட்டங்களிற் சேர்ந்து திருத்தொண்டு புரிய முன் வரல் வேண்டும். ஒவ்வோரிளைஞனும், அழியும் இவ்வுடலை அழியாப்புகழை நிறுவுவதிற் பயன் படுத்துவேன் என்று இறுமாந்து இந்நெறியில் ஈடுபடுதல் வேண்டும். திருத்தொண்டர்கள் தெய்வ நீற்றினை நிறையப் பூசிக்கொண்டு, கண்டிகை பூண்டு கம்பீரமாக உரத்தகுரலோடு மக்கள் மனத்தைக் கவரும்படி தெய்வத் தமிழைப்பற்றியும் சைவப் பொருள்களைப்பற்றியும் சொற்பொழிவுகள் செய்தல் வேண்டும். ஜனங்கள் திரளாகக் கூடுமிடங்களிலெல்லாம் சைவப் பிரசங்கங்கள் நடைபெறல் வேண்டும். சிறப்பாகக் கிராமப் பிரசாரத்திலேயே தொண்டர்கள் கண்ணுங் கருத்துமா யிருத்தல்வேண்டும். நாட்டின் பொது ஜனங்கள் கிராமங்களிலேயே வசிக்கின்றார்க ளாதலால், கிராமப் பிரசாரந்தான் பெரும்பயனை யளிப்பதாகும். கிறித்தவப் பாதிரிமார்கள் கிராமப் பிரசாரத்தினாலேயே, திரளான மக்களைக் கொள்ளைகொண்டு வருகின்றார்கள். எனவே, நமது திருத்தொண்டர் குழாங்களும் கிராமங்களுட் புகுந்து, சிவமணத்தைப் பரப்பி, நம்மக்கள் புறமதம் புகாதவண்ணம் தடுத்தல்வேண்டும். அன்னோர்க்கு நமது சமய மாண்பினை நன்கு அறிவுறுத்துதல் வேண்டும். நல்லதாளில் பெரிய எழுத்துக்களில் எளிய நடையில் அழகிய சித்திரப்படங்களோடு விளக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களை யாண்டும் பரப்புதல் வேண்டும். சமயாசாரியார், சந்தானசாரியர் முதலியவர்களுடைய படங்களை யெல்லாம் ஐந்து ஆறு நிறங்களோடு கூடிய அழகிய சித்திரப்படங்களாக அச்சிட்டுச் சிறியதோர் விலைக்கு விற்றல் வேண்டும். அடியவர்களனைவரும், போற்றித் திருவகவல், திருத்தொண்டத்

தொகை, திருவங்கமாலை முதலிய திருப்பாசுரங்களைப் பாரா யணஞ் செய்துகொண்டு பஜனைக்கோஷ்டிகளாகச் செல்லலாம். ஒவ்வொரு திருக்கூட்டத்திற்கும் ஒரு ரிஷபக்கொடியும், ஒரு சுதிப்பெட்டியும், சில தாளங்களும், பெரியபடிக்கு இரண்டு மூன்று படி கொள்ளக்கூடிய நறுமணங்கமழுந் திருநீற்றுப்பை யொன்றும் அவசியம் இருத்தல் வேண்டும். கையெழுத்துப் பிரதிகளெடுக்கும் பெட்டி (Cyclo-style) ஒன்று இருந்தால் சிற்றறிக்கைகள் வெளியிடுதற்குச் சுலபமாகவிருக்கும். சில தொண்டர்கள் சிறப்பாக விளக்குப் படங்களோடு சொற்பொழிவு நிகழ்த்துவோர் (Magic-lantern lecturers) ஆக விருக்கலாம். இனி, இத் திருத்தொண்டர்கள் முக்கியமாகப் பரப்பவேண்டிய கொள்கைகளைப்பற்றிச் சில உரைகள் கூறுகின்றேன். முதலா வது எல்லா அறங்களுக்கும் அடிப்படையாகவுள்ள சீவகா ருண்ய நலத்தையே நன்கு வலியுறுத்துதல் வேண்டும். மக்க ளாவா ரனைவரும் மாமிச உணவை நீக்கிவிட்டு, மரக்கறி உணவு களையே மாந்தும்படி செய்தல் வேண்டும். ஒவ்வொரு திருத் தொண்டரும், "நான் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சைவம் பிடிக்கும்படி செய்திருக்கின்றேன்" என எண்ணி எண்ணி இன்புறுமாறு தாம் தாம் இவ் வேலையினைப் பெருவேட்கையோடு செய்தல் வேண்டும். கட்குடியையும் அறவே யொழித்து விடு தற்குப் பெரும்பாடு படுதல்வேண்டும். எக் காரணத்தை முன் னிட்டும் எவரும் சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடாது, சுத்த ஆராதனையே செய்து சுகமாக வாழும்படி செய்தல் வேண் டும். வைதிகரென்போர் செய்யும் உயிர்க்கொலை யாகத்தை எவ் வகையானும் எவரும் ஆதரிக்காத வண்ணம் செய்தல் வேண் டும். பத்தி மார்க்கத்தையே மக்களுக்குப் பெரிதும் வற்புறுத்து தல் வேண்டும். இந்நெறியை வளர்த்தற்குத் துணையாக, ஆறு முக நாவலரவர்கள் வரைந்துள்ள திருவிளையாடற் புராணவச னம், பெரியபுராணவசனம், கந்தபுராணவசனம் முதலிய புத்த கங்களை நூற்றுக்கணக்காக வாங்கி வைத்துக்கொண்டு அசல் விலைக்கு விற்றல்வேண்டும். சில திருத்தொண்டர்கள் சிறப்பாக விபூதி உருத்திராக்கப் பிரசாரஞ் செய்யலாம். இவர்கள் ஆயிரக்

கணக்கான விபூதிப்பைகளைத் தைத்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஏராளமாக ஐந்து ஆறுமுக உருத்திராக்கங்களைக் கயிற்றில் கோத்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். மாமிச உணவினை விலக்கிய மக்களனைவருக்கும் சிவநாமத்தினைச் சொல்லி இவ்வுருத்திராக்க மங்கல நாணைப்பூட்டி விடுதல்வேண்டும். உருத்திராக்க தாரணஞ் செய்து கொள்ளுவோர் அனைவருக்கும் ஒவ்வொரு விபூதிப் பையும் கொடுத்தல் வேண்டும். கிராமங்களி லுள்ள சிறு பள்ளிக்கூடங்களுக் கெல்லாம் சென்று மாணவர் களுக்கு மிட்டாய், வாழைப்பழம், ஸ்லேட் பென்சில், சிறு கதைப்புத்தகங்கள் முதலியவற்றைக் கொடுத்து, அவர்களனைவ ரையும் மாமிச உணவை விலக்கும்படி செய்து, அன்னோர்க்கு உருத்திராக்க தாரணஞ் செய்தல் வேண்டும். சிறு பிள்ளைகளே இனி வருங்காலத்து மக்களாதலால் சிறு பள்ளிக்கூடங்கள் முதல் பெரிய பள்ளிக்கூடங்கள் வரையில் நமது தொண்டர்கள் புகுந்து மாணவர்களைச் சிவநெறியிற் பழக்குதல் வேண்டும். பெரிய ஆங்கிலக் கல்லூரிகளிலும், உயர்தரக் கலாசாலைகளிலும் மற்ற நடுத்தரப் பாடசாலைகளிலும், நமது அன்பர்களிற் சிலர் வாரம் ஒருமுறை ஒவ்வொரு வகுப்பிற்கும் சன்மார்க்கத்தைப் போதிக்கும் சமய போதகராகச் சென்று பணி செய்தல் வேண்டும். இஃது ஒரு முக்கியமான வேலையாகும். இவ் வேலையினைச் செய்தற்குத் துறவிகளும், உத்தியோக ஓய்வுபெற்றுள்ள அன்பர் களும் (Pensioners) அவசியம் முன்வருதல் வேண்டும். இந்நாளில் நமது சைவப் பெருமக்களிற் பலர் ஐந்தெழுத் தருளுபதேசம் பெற்றுக்கொள்ளுகின்றார்களில்லை! சுமார்த்தர்களால் உபநயனச் சடங்கு எவ்வாறு சமயப்பிரவேசக் கிரியையாகக் கட்டாயமாக அநுட்டிக்கப் படுகின்றதோ, அவ்வாறே இவ் வைந்தெழுத்தரு ளுபதேசம் நமது சமயப்பிரவேசக் கிரியையாதலால், கட்டாய மாக எல்லோராலும் அவசியம் அநுட்டிக்கப்படல் வேண்டும். இந் நெறியினை வளர்த்தற்கு ஒவ்வொரு திருக்கூட்டத்தாரும், "நாங்கள் இந்த ஆண்டில் நூறு பெயர்களைச் சமயதீக்கை பெற் றுக்கொள்ளுமாறு செய்துள்ளோம்" என எண்ணி இன்புறு மாறு வேலை செய்தல் வேண்டும். ஆலய வழிபாடு இந்நாளில்

பெரிதும் மறக்கப்பட்டு வருதலால் பொது ஜனங்களுக்கு ஆலயவழிபாட்டின் அவசியத்தை நன்கு வற்புறுத்துதல் வேண்டும். அன்பர்க ளனைவரும் நாடோறும் அருட்பாக்க ளைந்தினை யும் அவசியம் பாராயணஞ் செய்யுமாறு செய்தல்வேண்டும். இவ்வாறு பாராயணஞ் செய்வதற்கு, ஆறுமுகநாவல ரவர்களால் வெளியிடப்பட்டுள்ள அகத்தியர் தேவாரத்திரட்டுடன் கூடிய அருட்பாப் புத்தகம் சாலச் சிறந்ததாகும். இவ் வருட்பாப் புத்த கத்தை நூற்றுக்கணக்காக வாங்கிவைத்துக்கொண்டு, பாரா யணஞ் செய்ய விரும்புவார்க்கு அசல்விலைக்கு விற்கலாம். அருச் சித்தற்கு, "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" முதலிய அருச்சனைப் பதிகங்களைப்பாடி மகிழச் செய்யலாம். பலர்க்கு நமது சமயாசாரியர் யாவர் என்பது நன்கு விளங்கவில்லை. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருட் குரவர் நால்வருமே நமது சமயாசாரியர்கள் என்பதை நன்கு வலியுறுத்தி, அன்னோர் திருவடிகளை அனைவரும் முடிகளிற் புனைந்து போற்றுமாறு செய்தல் வேண்டும். இனிச் சைவப் பெருமக்களாகிய நமக்குச் சிவபெருமானே முழுமுதற் கடவு ளாவாரென்பதையும், மூவரில் ஒருவராகிய உருத்திரரல்லர் என் பதனையும் எல்லோரும் இனிது உணருமாறு செய்தல் வேண்டும். மற்றும் நமது சைவ நன்மக்க ளனைவரும், "நாங்கள் செய்த தவத்தால் சைவ சமயத்திற் பிறந்து பேரின்பப் பெரு வாழ்வு பெறும்பேறு பெற்றுள்ளோம்." என இறுமாப்பெய்தி இன்புறுமாறும், எவரும் எக்காரணங்கொண்டும் புறச்சமயங் களைக் கனவினும் கருதாதிருக்குமாறும் செய்தல் வேண்டும். இதற்குமுன்னர் நமது சமயமாட்சியினை யறியாது புறச்சமயம் புகுந்துள்ளோரில், இது காலை நமது சமயமாண்பினை யுணர்ந்து திரும்பிவர விரும்புவோரைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளு தல் வேண்டும். இவ்வாறு புறச்சமயம் புகுந்து திரும்பி வரு வோரை மீட்டும் அழைத்துக் கொள்வதை நாம் ஒருகாலும் மறுத்தலாகாது. நமது சமயாசாரியர் நால்வரில் இருவர் இதற் குப் பெரும் வழிகாட்டிகளாகவிருக்கின்றார்கள். அப்பரெம்பெரு மானார் தாமே சமண் சமயம் புக்கு அதிற் சின்னாளிருந்து,

மீட்டும் சைவ சமயத்திற் பிரவேசஞ் செய்தருளினார்கள். திருஞான சம்பந்தப் பெருமானார் மதுரைமாநகரத்தில் சமணர்களை வாதில் வென்ற காலத்தில், பசுவின் சாணத்தைப் பச்சையாகப் பூசிக்கொண்ட பத்தர்களனைவரையும், பசுவின் கன்றுக்குட்டிகளைத் தம் தோள்களிலே தூக்கிக்கொண்டு நின்ற அன்பர்களனைவரையும் சமணர்களென ஒறுக்காது சைவரெனக் காத்தருளினார்கள். இனிப் புறச்சமயம் புகுந்தவர்கள் சைவசமயப் பிரவேசஞ் செய்கின்ற காலத்து, அன்னார் பிராயச்சித்தம் முதலியவற்றிற்காக அதிகச் செலவு செய்து வருந்தும்படி செய்தலாகாது. திலகவதியார் திருவாளன் திருநீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதித் திருநாவுக்கரசடிகளின் நெற்றியில் சாத்தி அன்னாரைச் சைவசமயப் பிரவேசஞ் செய்வித்ததுபோல், பெரியோரைக்கொண்டு அன்னோர் திருக்கரங்களால் தெய்வ நீற்றினை அள்ளித் திருவைந்தெழுத்தை யோதி நிறையப் பூசுவித்து வருவோரனைவரையும் எளிதிற் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். சேர்த்துக் கொள்ளாவிட்டால், நமது சமயத்திற்குரிய ஜனப்பெருக்கும் வரவரக் குன்றுவதோடு, நமது சமயதர்மமும் பிறழ்ந்து போவதாகும். இனித் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதற்கு நம்மால் எவ்வளவு தூரம் பாடுபட முடியுமோ, அவ்வளவு தூரம அவசியம் பாடுபடல் வேண்டும். புறமதம் புகுவோரிற் பெரும்பாலோர் தாழ்ந்த வகுப்பாரே யாவர். காரணம் நாம் அவர்களுக்குச் சமயஞான போதனையும் செய்யாது, நம்மை நண்ணவும் விடாது அடித்துத் துரத்துதலேயாம். அன்னோரும் மக்களே யென நினையாது, இவ்வாறு நாம் அவர்களை அடித்துத் துரத்தும் வரையில் நமது சமயம் வளருதற்கு இடமேயில்லை ! ஒரு சமயம் என்பது, பலரும் வந்து சேர்ந்து பயன்பெற்றுய்யுமாறு தனது வாயில்களைத் திறந்து வைத்திருந்தா லொழிய, அது சமயம் எனப்பட மாட்டாது. விரிந்த நோக்கத்தோடு ஒரு சமயத்தை உலகம் முழுவதும் பரப்பவெண்ணாது, இலை மறை காய்போல், ஒருசிலர்க்குமட்டும் பயன் படுமாறு மறைத்து வைத்துக் கொள்ளுதல் தகாது ! தகாது !! தாராளமாக மக்களாவா ரனைவரும்

தன்னை யடைந்து ஆனந்த வெள்ளத்தில் திளைக்கும் வண்ணம் எல்லோரையும் அறை கூவி யழைத்து ஆட்கொள்ளுவதே ஒரு சமயத்திற்குச் சிறந்த அடையாளமாகும். எனவே, நமது அருமைச் சகோதரர்களாகிய தாழ்ந்த வகுப்பாரை உயர்த்தி அன்னோர்க்கும் நம்மத உரிமைகளை நல்கி நல்வழிக்குய்த்தற் குரிய நெறிகளை வகுத்துக் காட்டுதலில் நாம் ஒருநாளும் பின் வாங்குதலாகாது. சில தொண்டர்கள் தம் வாழ்நாளை அவர்க ளுக்கெனச் சிறப்பாகப் பாடுபடுவதில் ஈடுபடுத்துதல் வேண்டும். சுகாதார நெறிகளை அவர்களுக்கு நன்கு போதித்தல் வேண்டும். அன்னோரிற் சிலர் நாம் உண்டு எறியும் எச்சிலை;உண்டலையும், மாடுகளை வெட்டித் தின்றலையும், கட்குடித்தலையும் அறவே யொழித்து விடுமாறு செய்தல்வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக் கெனச் சிறப்பான கலாசாலைகளைத் தாபித்து, நல்ல ஆசிரியர்களைக் கொண்டு அப் பிள்ளைகளை நன்னெறியிற் பழக்குதல் வேண்டும். அவர்கள் குடிசைகளுக்குச் சமீபத்தில், அவர்களுக்கெனச் சிறப்பாகப் பிள்ளையார் கோவில்களை யேற் படுத்தி, அவைகளில் அவர்கள் தினந்தோறும் வந்து வழிபாடு செய்யும்படி செய்தல்வேண்டும். இதற்கு ஒரு திருத்தொண்டர் நூறு இருநூறு பிள்ளையார்களைச் செய்து அவர்களிருக்கு மிடங்களிலெல்லாம் சென்று சமீபத்திலுள்ள அரசமரத் தடியில் பிரணவப்பொருளாம் பெருந்தகையைப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். இனிப் பெண்மக்களுக்குச் சமயஞானத்தை ஊட்டு தலிலும் நாம் நமது கவனத்தை நன்கு செலுத்துதல் வேண்டும். நமது பெண்மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பெயர் நமது சமயக் கொள்கைளை நன்கு உணராதவர்களாகவே யிருக்கி றார்கள். சமய ஞானம் பெண்மக்கள்பால் வளர்ந்தாற்றான், வருங்காலத்துப் பிள்ளைகள் எல்லோரும் சமயஞான வடிவமாகத் தோன்றுவார்கள். எனவே, இந் நெறியினைத் திருத்தொண்டர் கள் சிறிது வளர்ப்பதோடு, கல்வியறிவுள்ள தாய்மார்களும் பலர் முன்வந்து இதற்காகப் பெரிதும் பாடுபடல் வேண்டும். குருடர் செவிடர் ஊமையர் முதலியவர்களுக்கும் நமது சமயச் சார்பில் ஒரு சில இடங்களில் பாடசாலைகள் தாபிக்கப்படல்

வேண்டும். திக்கற்ற குழந்தைகளை வைத்து வளர்த்தற்குரிய அநாதரக்ஷகாலயங்களும் நமது சமயச் சார்பில் ஆங்காங்கு அரும்புதல் வேண்டும். இது சிறந்த பெரிய வேலையாகும். இதற்குப் பெரும்பொருள் வேண்டும். இப் பெரும்பொருளைப் பெறுதற்கு இலேசான வழியொன்று உண்டு. ஓர் பெரிய நீர் நிலை வீண்கமர் நிலத்தில் பாய்ந்துகொண் டிருக்கின்றது. அதனை இவ்வழியில் திருப்பிவிட்டாற் போதும். அஃதாவது வீண் சோம்பேறிகள் வயிறுர வுண்டு ஏப்பமிட்டுக்கொண்டு திரிதற்குக் காரணமாகவுள்ள அன்ன சத்திரங்களை, "ஆதுலர்க் கன்னசாலை ஓதுவார்க்கு உண்டி" எனும் ஆன்றோர் வாக்கிற் கிலக்காக இவ் வழியில் பயன்படுத்துதல் வேண்டும். அன்னசத்திரங்கள் வைத்திருப்போர் இதனை நன்கு கவனித்து அவசியம் சீர்திருத்துதல் வேண்டும். இனி, நமது சைவப் பெருமக்கள் வைத்திருக்கின்ற தரும வைத்தியசாலைகளில், காலையும் மாலையும் கடவுள் வணக்கம் செய்வதோடு, சமய சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களினையும் வழங்கி, நோயாளிகளுக்கும் அவர்களோடு கூட வருவோர்க்கும் சமயபோதனை செய்தல் வேண்டும். நமது அருந்தமிழ்ப் பாடசாலைகளில் சமய போதனையும் ஓர் முக்கிய மான பாடமாகக் கருதப்படல் வேண்டும். இந்நாளில் இது நன்கு கவனிக்கப்படாதது பெரிதும் வருந்தத் தக்கதேயாம். சமய ஞானம் கலவாத கல்வியறிவு எட்டுணையும் பயன்படாது. எனவே, அருந்தமிழ்க் கலாசாலைகளின் அதிகாரிகள் சமயக் கல்வியினையும் முக்கியமானதாகக் கருதுதல் வேண்டும். இவ்வாறு பாடசாலைகளில் சமயக் கல்வியினைப் போதிப்பதற்குப் பேரறிஞர்கள் சிலர் உதவிகள் மிக இன்றியமையாதனவாம். முதற்கண், செய்யுள் வடிவமாகவுள்ள சமய நூல்க ளனைத்தினையும் இனிய எளிய வசன வடிவமாகவும் ஆக்கித்தரல் வேண்டும். மெய்கண்ட சாத்திரம் பதினுன்கினையும் பன்னிரு திருமுறைக ளினையும் வடித்துத் திரட்டி ஒன்றுக் கூட்டி, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவர் உபதேச மொழியைப்போல், சிறு சிறு உவமானங்களாலும் கதைகளாலும் சரித்திரங்களாலும் பெரிய தத்துவங்களை விளக்கிக் காட்டும் வண்ணம், சைவ சித்தாந்த

அமுத மொழிகள் எனும் பெயரோடு ஓர் இனிய நூல் எழுதித் தரல் வேண்டும். "சைவ சமயம் என்பது என்ன?" எனும் பெயரோடு சைவ சமயக் கொள்கைகளனைத்தினையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிக்காட்டும் இனிய வசன நூல் ஒன்றும் அவசியம் எழுதப்படல் வேண்டும். இவ்விரு நூல்களும் ஆங்கிலத்திலும் யாக்கப்பெறல் வேண்டும். ஆண்டுதோறும் தல புராணங்களையே எழுதி எழுதிக் குவிக்கும் புலவர் பெருமக்களும் வீண் விவாதங்களையே எழுதி வெளியிடும் அன்பர்களும், இவ் வழியில் இறங்கி வேலை செய்தல் பயனுடையதாகும். பொதுவாக மாணவர்களுக்குச் சிறந்த நூல்களைக் குறிப்பிட்டு ஆண்டிற் கொருமுறை சமயப் பரீக்ஷைவைத்து அதிற் றேறுபவர்களுக்குப் பரிசுகளும் யோக்யதா பத்ரங்களும் வழங்குதல் வேண்டும். பொதுவாகவும், சாத்திரங்களிலும், தோத்திரங்களிலும் ஆக மூன்று திறமாகப் பரீக்ஷைகள் வைத்து நடாத்தலாம். தோத்திரப் பரீக்ஷையினைக் குறிப்பிட்ட எண்ணுள்ள பாடல்களைப் பிழையற ஓதுவார்க்கு நடாத்தலாம். இனி, வேத-ஆகம-தேவார பாடசாலைகளை யெல்லாம் சோற்றுச் சாலைகளாக நடாத்தாது கலாசாலைகளாக நல்ல முறையில் நடாத்தி, அவைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் பரீக்ஷைகள் வைத்துப் பரிசுகள் வழங்குதல் வேண்டும். மறந்தும் நம்மக்களைக் கிறித்தவப் பாதிரிமார் பாடசாலைகளுக்கு அனுப்புதலாகாது. பெண் மக்களுக்கு அவரவர் வீட்டுக்கு வந்து கல்வி கற்பிக்கும் ஜனனு மிஷனைச் சேர்ந்த கிறித்தவ உபாத்திமைப் பெண்மணிகளை நம்முடைய தூய இல்லங்களிலே அடியெடுத்து வைக்க விடலாகாது. மேற் கூறிப்போந்த இரண்டனுக்கும் இடங்கொடுப்பதால் வருங் கேடுகள் பல. அவை யாவும் அன்பர்கள் நேரிலே அறிந்தனவே யாம். ஆகவே, நம்முடைய மக்களுக்கு நம்முடைய உபாத்தியாயர்களைக் கொண்டே கல்வி கற்பித்தல் வேண்டும். பெற்றோர்கள் இதிற் பெருஞ் சிரத்தை செலுத்துதல் வேண்டும். இனித் திருக்கோயில்களிலுள்ள திருவோலக்க மண்டபங்களில் அவசியம் தினந்தோறும் புராணபடனம் நடைபெறல் வேண்டும். ஆங்கு வடமொழிச் சுலோகங்களைச்

சொல்லி அர்த்தஞ் செய்வதால் எள்ளளவும் பயனில்லை. நமது இன்றமிழ் மொழியில் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்டுள்ள திருவிளையாடற்புராணம் பெரியபுராணம் கந்தபுராணம் முதலியவைகளையே வாசித்தல் வேண்டும். திருக்கோயில்களிலே திருவிழாக் காலங்களில் வீண் செலவு செய்து நடாத்தும் வேசையர் நடனத்தை யறவே ஒழித்து விடுதல் வேண்டும். அதற்குப் பதிலாகச் சைவப் பெருஞ் சொற்பொழிவுகளை நடாத்துவித்தல் வேண்டும். இனி, நமது சிவாகமங்களை யெல்லாம் திரட்டி அச்சிடுவதோடு, அருந் தமிழ் மொழியினும் அவசியம் அவை யனைத்தையும் மொழி பெயர்த்திடுதல் வேண்டும். நமது சைவ நூல்களை யெல்லாம் நல்ல தாளில் அழகிய காலிகோ கட்டிடத்தில் அச்சிட முயலல் வேண்டும். இவ் வேலையினைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் செய்யத் தொடங்கியிருப்பது பெரிதும் பாராட்டாற் பாலதாகும். உண்மைச் சைவ சமய வளர்ச்சி கருதி உழைக்கும் மாதப் பத்திரிகைகளைச் சிவநேசச் செல்வ ரனைவரும் அவசியம் ஆதரித்தல் வேண்டும். சைவ சமயிக ளாவாரனைவ ரில்லங்களினும், சிவாலயங்க ளனைத்தினும் நடை பெறும் கிரியைகளெல்லாம் சைவக் கிரியைகளாகவே யிருத்தல் வேண்டும். இந்நாளில் நடை பெறுவதைப் போல் சுமார்த்தக் குழப்பம் தலை காட்டுதலாகாது. சைவக் கிரியாபத்ததிக ளெல் லாம் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு வழக்கத்திற்கு வந்தால், சொல்லுவோர்க்கும் கேட்போர்க்கும் இனிமையாக விருக்கும். இதுகாறும் எளியேன் சைவ சமய வளர்ச்சிக்குரிய பல்வேறு வகைப்பட்டுள்ள பொருள்களைப் பற்றி பல உரைகள் வழங்கி யுள்ளேன். இவைக ளனைத்தினையும் கேட்கும்பொழுது ஒரு சிலர்க்குக் கனவுகாண்பதுபோ லிருக்கலாம். ஆனால் உண்மை யில் கனவுகாண்பதல்ல. எல்லா உரைகளும் சில ஆண்டுகளாகச் சிறியேன் சிந்தனை செய்ததின் பயனேயாகும். மேலும் செய் கையிலும் சிலவற்றை எளியோங்கள் காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் செய்து வருதலும் அன்பர்களறிந்த தொன்றேயாம். ஈண்டு அவைகளை யெல்லாம் எடுத்து விரித்

துரைப்பதன் காரணம், நமது சைவப் பெருமக்களனைவரும் முதற்கண் இதனைச் சிந்தனையிலாவது வைத்துச் சிறிது சிறிதாகவாவது செய்கையிற் காட்ட முன்வரல் வேண்டும் என்பதேயாகும். மேலும் பல நோய்களால் வருந்தும் ஒருயிர்க்கு எல்லா நோய்களுந் தீருமாறு மருந்து கொடுத்தாலொழிய, ஒன்றினைமட்டுந் தீர்க்கத்தக்க மருந்தைக் கொடுப்பதிற் பயனில்லை. ஒன்று தீர்ந்தாலும் மற்றொன்று துன்புறுத்தும். எனவே, நமது சமய வளர்ச்சிக்குரிய எல்லாச் சீர்திருத்தங்களையும் நாம் செய்தே தீருதல்வேண்டும். நமது சைவப் பயிர் பரிபாலிப்பாரின்றி இதுபோழ்து பல்வகையானும் தளர்வுற்று வாடி நிற்கின்றது. மேலும் பல்வகைக் களைகள் அதனைப் பெரிதும் துன்புறுத்துகின்றன. ஒருபக்கம் சுமார்த்தக் குழப்பம் அதனை விழுங்கிக்கொண் டிருக்கின்றது. ஒரு பக்கம் கிறித்தவமதம் அதனைச் சூழ்ந்துகொண்டு காடாக வளர்ந்து வருகின்றது. ஒருபுறம் "எம்மதமும் சம்மதம்" எனும் புதுக்கொள்கைகள் அதனைப் பறக்கச் செய்கின்றன. நமது மக்களிற் பலர் சமயஞான மின்மையால், தமதுரிமைப் பொரு ளியாதென்பதை உணராது வீண்பொழுது போக்குகின்றார்கள். படித்தவர்களிலும் பிரபுக்களிலும் பெரும்பாலோர் அயர்ந்து உறங்குகின்றார்கள். திருமடங்களெல்லாம் வெறும் மடங்களாகி வருகின்றன. சைவ நூற் பயிற்சியும் சைவக் கொள்கைகளும் பெரிதும் அருகிவருகின்றன. அன்பர்களே! இதுவோ நாம் அயர்ந்து உறங்குதற்குரிய காலம்? எழுமின்! எழுமின்!! விழிமின்! அறிமின்! சைவப் பயிரைப் பரிபாலியுங்கள்! பரிபாலியுங்கள்!! நாடெங்கணும் சிவ முழக்கஞ் செய்யுங்கள்! பரந்த நோக்கத்தோடு சண்டை சச்சரவின்றி, விரிந்த நமது சமயக் கொள்கைகளை யாண்டும் செய்கையிற் பரப்புங்கள். வீண்பெருமை பேசுவதிற் பயனில்லை! பேச்சுக்காலம் பறந்து விட்டது. செய்கைக் காலம் பிறந்திருக்கின்றது. எனவே, எல்லோரும், "செய்கை செய்கை" யென்று சிந்தனை செய்துகொண்டு சிவநெறியை வளருங்கள்! வளருங்கள்.

முற்றிற்று

பொய்கையார்

தமிழாராய்ச்சியிற் சிறந்த திருவாளர் மு. இராகவையங்கார் அவர்கள் 'செந்தமிழ்' முதற்றொகுதி ஆறும்பகுதியில் 'பொய்கையார்' என்னும் தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை வரைந்துள்ளார்கள். அதில், கடைச்சங்கப் புலவராகிய பொய்கையாரும், திருமாலடியாருள் ஒருவராகிய பொய்கையாழ்வாரும் ஒருவரேயென முடிவு செய்யப் பெற்றுளது. நற்றிணைக்கு உரையெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள் பொய்கையார் வரலாறு கூறுமிடத்தே "யாப்பருங்கல விருத்தியுரைகாரர் நாலாயிரப் பிரபந்தத்து இயற்பா முதற்றிருவந்தாதியில் வரும் பாடல்களுள் 'பாலன்றன துருவாய்' (கூ௯), 'எளிதினிரண்டடியும்' (ருக) என்னும் வெண்பாக்களை யெடுத்துக் காட்டி 'இப்பொய்கையார் வாக்கினுள்' என்று கூறியதனால் இவரே வைஷ்ணவர்கள் துவாபர யுகத்திற் பிறந்தவராகக் கூறும் பொய்கையாழ்வாரென்றறியப்படும்" என்றனர். இவர்கள் இவ்வொரே யேதுக் கொண்டு இங்ஙனம் துணிந்தது ஐயங்காரவர்கள் முன்னமே விரித்தெழுதியிருப்பது கருதிப் போலும்? சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் தாம் அச்சிட்ட களவழி நாற்பது முகவுரையில் பொய்கைப் பெயரினர் இருவரையும் ஒருவராகவே துணிந்து, அதனை ஐயங்காரவர்கள் எழுதியிருப்பன கொண்டு நன்கு தெளியலாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இங்கே காட்டிய மூவருள் பின்னைய இருவரும் தாமாக ஒன்றும் ஆராய்ந்து முடிவுகட்டாது ஐயங்காரவர்களின் ஆராய்ச்சி முடிவினைப் பின்பற்றியிருத்தலின் இங்கு நாம் ஆராய்தற்பாலது ஐயங்காரவர்கள் எழுதியிருக்கும் கட்டுரையே. அன்னார் தமது கட்டுரையில் 'முற்காலத்தினரென் றறியப்பட்ட அவ்விரு பொய்கையாருடைய குணவிசேடங்களையும் ஆராயுமிடத்து, ஒருவர் இறைவனது பொருள்சேர் புகழ் பாடும் புலவராகவும், மற்றொருவர் நாக்கொண்டு மானிடம் பாடும் புலவராகவும்

காணப்படுவர். இங்குக் கூறிய இவ் விருவேறு குணங்களே, பொய்கையார் இருவர் என்ற கொள்கையைப் பலர் மனத்திலும் நெடுங்காலமாக அழுந்தச் செய்து வருகின்றன. இம் மனவழுத்தத்தாலேதான் பொய்கையார் ஒருவரா? இருவரா? என்னும் ஐய ஆராய்ச்சியும் பெரும் பாலார்க்குள் நிகழாமற் போயிற்று" என்று கூறி ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளனர். இங்ஙனம் தாம் உடன் பட்டவாறே நெடுங்காலமாகப் போதரும் கொள்கையை உண்மை நிலையிடுங் கருத்தால் ஆராயப் புகுந்த ஐயங்காரவர்கட்குத் தமது கட்டுரையையும் பிறர் ஆராய்ந்து உண்மைகாணப் புகுவதில் உவப்பே விளையுமென்ப தொருதலை. நீண்ட காலமாகப் பலரும் ஐயப்பாடின்றி ஒருமெற்றியே துணிந்து வந்ததொரு கொள்கையுடன் மாறுபடுவார் தாமே அதற்கு வலியுடைய ஆதரவுகள் காட்டக் கடமைப்பாடுடைய ராவர். ஐயங்காரவர்களால் தமது மறுதலைக் கொள்கைக்கு என்ன ஆதரவுகள் காட்டப்பட்டுள்ளன என்பது நோக்கற்பாலது. ஒருபெயரினராயினும் இருவர் என்று கொள்ளப்படுவோரை ஒருவரென்று நாட்டலுறின் அவர்க்குள் காலம், இடம், குடிப்பிறப்பு, பண்பு முதலியவற்றில் ஒருமைப்பாடு காணவேண்டியது இன்றியமையாததாகும். பொய்கையாழ்வார் துவாபர யுகத்தில் எட்டிலக்ஷத்து அறுபத்தீராயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டாவதான சித்தார்த்தி வருடத்தில், கச்சித்திருவெஃகா என்னும் தலத்தின் பாங்கர் ஒரு பொய்கையின் கண்ணே பூத்ததொரு தாமரை மலரிலே திருவவதாரஞ் செய்தனர் என்பது பரம்பரை வரலாறு. இதனை ஐயங்காரவர்கள் ஒத்துக் கொள்ளவில்லையென்பது வெளிப்படை. சரித்திர ஆராய்ச்சி செய்வார் சிலர் ஆழ்வார்கள் அனைவரையுமே மிகவும் பிற்பட்ட காலத்தினராகக் கூறுகின்றனர். ஐயங்காரவர்களோ பொய்கையாழ்வாரது காலம் இன்னது என ஆராய்ந்து அறுதியிடுதல் செய்யாதே சங்கத்துச் சான்றோராகிய பொய்கையாரையும், ஆழ்வாரையும் ஒருவரெனத் துணிவாராயினர். தொல்காப்பிய வுரை முதலியவற்றில் பொய்கையாழ்வார் அருளிய திருவந்தாதி எடுத்துக் காட்டப்பட்டிருப்பது அவரைச் சங்ககாலத்தினரென்று துணிதற்கு

ஆதரவாகமாட்டாது. என்னை? சங்க நாட்கு மிகவும் பிற்பட்டவை யென்று தெரிகிற எத்தனையோ பல நூல்களிலிருந்து தொல்லை யுரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியிருத்தலின் என்க. அன்றியும் தொல்காப்பியவுரையில் புதுவது கிளந்த யாப்பாகிய விருந்திற்கே பொய்கையாரது அந்தாதி எடுத்துக் காட்டாக விருப்பது சிந்திக்கற்பாலது.

(தொடரும்)

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

காழித்தேவாரச் சிறப்பு

(௨௧௧-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குக் கவனிக்கத்தக்க பழைய வழக்கங்களாவன:—

முதலாவது-அரச லௌகிகப் பகுதியினர் தங்கள் மன்னரது கொடி பொறி முதலிய சின்னங்களை, அவரது ஆணையையும் அநுமதியையும் அதிகார எல்லையையும் காட்டுவதற்குப் பொறித்து வந்தார்களென்பதும்; இரண்டாவது-பொதுச் சாசனங்களை ஆவணக்களரியிற் காப்பிடச் (பதிவுசெய்ய) செய்தலைப் பற்றி, 'பலவகை நடவடிக்கைகளில் எழுதப்படும் பத்திரங்களைக் (ஆவணங்களை) காப்பிடக் பதிவுசெய்ய) களரிகளும் (சபைகளும்) அக்காலத்து ஊர்கள்தோறு மிருந்தன. பத்திரம் அடியில் வருமாறு எழுதி ஆவணக்களரிக்குக் காட்டி அவர்கள் காப்புப் பெறுவார்கள். "இந்நான் கெல்கைக் குட்பட்ட தரமிலி மிகுதிக் குறைவுபட்ட குழி ௬௱. இக்குழி அறுநூற்றுக்கு எம்மி லிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு ௨௰. இப்படி இருபது ஆவணக்களரியே காட்டி காப்பிட்டு கைச் செலவறக் கொண்டு விற்று விலைப்பிரமாணஞ் செய்துகொண்டு, மண்ணற விற்றுப் பொருளறக் கொண்டோம். இக்குழி அறுநூற்றுக்கும் விலைப்படி பணம் இருபதுமே விலையாவதாகவும். இதுவல்லது வேறு

பொருள் மாவறுதி, பொருட்செலவோலை காட்டக் கடவதல்லவாக வும்.'' (திருப்புகலூர்ச் சாசனம்.) இப்பத்திரத்தை யெடுத்துக் கொண்டு விற்றவனும், வாங்கினவனும் ஆவணக்களரிக்குச் சென்று அவர்கள் முன்பு தாம் இசைந்த விலைத்திரவியமும், நில விஸ்தீரணமும் சொல்லி இருவரும் ஒப்புக் கொண்டோ மென்று உறுதிமொழி கொடுத்தபின், களரியாரால் காப்பிடப் பெற்றுத் திரும்புவார்கள். இச் சாஸனம் உத்தரோத்தரம் வேண்டியதாயின் அவ்வூர்க் கோயிலின் சுவரில் வெட்டுவது வழக்கம். இவ்வாறு வெட்டுவதனால் பிற்காலத்தார் சாஸனப் படி கட்டளைகள் நடக்கின்றனவா வென்று வினவ ஆதாரமாகும். அதை உத்தேசித்துத்தான் கல்வெட்டுப் பொறிப்பது வழக்க மாயிற்று? என்பதும், இத்தகைச் சாஸனங்களில் எழுதிக் கொடுத்தார் 'என் எழுத்து' 'என் கை' என்ற வாசகங்களால் முடிப்பார் என்பதும்; மூன்றாவது-வைதிகப் பகுதியினர் சிறப்புச் சாஸனங்களைத் திருக்கை கோட்டிகளிற் காப்பிடலைப்பற்றி, அந் நூலாசிரியர்கள் இலச்சினையையேனும் பெயரையேனும் சரணத்தையேனும் பரம்பரையையேனும் திருக்கடைக் காப்பிட்டு, பட்டோலை பிடித்தார் தமது கை யிலச்சினையிட்டு இன்னான் என்று எழுதி முடித்து, கோட்டித் தலைவரிடம் ஒப்புவிக்க, அவர் பிறரைக்கொண்டு ஒத்துப்பார்த்துத் தமக்குக் கிடைத்துள்ள அதிகார வரம்பின்படி நூலாசிரியர் கை யிலச் சினையால் இலச்சினையாய் (௧௯,உ௰)த் தக்க ஸ்தலங்களில் வைப்பர் என்பதுமே. இவ்வாறு காரியம் நடைபெறுவது அச் சாஸனங் களுக்கும் புத்தகங்களுக்கும் யதார்த்தத்தையும் விசுவாசத்தை யும் உறுதிப்படுத்துவதன் பொருட்டே. வதத்திற்கும் யுத்தத் திற்கும், க்ஷத்திரிய நீதிக்கும் யுத்த தர்மத்திற்கும், வதஞ் செய்யும் ஆற்றிற்கும் யுத்த முறைமைக்கும் வேறுபாடு கண்டறிவது அக்கால வழக்கமும் நீதி நூலும் உணர்ந்த பின்னரே யாதலாலும், நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு உரை செய்து முடித்தது சமணகால வழக்கையும் அச்சமணர் நூற் பொருளையும் உணர்ந்த பின்னரே யாதலாலும், திருமுறை கண்ட புராணச் செய்யுள்களுக்கு (௧௯, ௧௯, உ௰) உரை கூறிய

பெரியோர்களும் அப்புராண காலத்தும் அதற்கு முன்னரும் நிகழ்ந்த வழக்கையுணர்ந்து தெளிந்த பின்னரே பொருள் கூறி யிருக்கின்றார்கள். அப்பூர்வ வழக்கம் அறுநூறு வருடங்க ளாகச் சிறிது சிறிது மாறுபாடடைந்து இக்காலத்தும் அடங் கல் (தீர்வைத் திட்டம்), ஆவணக்களரி (பத்திரப்பதிவுசாலை), திருக்கை கோட்டி (புத்தகப் பதிவுசாலை)......எனக் கேவலம் லௌகிக விஷயங்களில் மாத்திரம் வழங்கிவருகிறது. முத் தமிழ் விரகருக்கும் நாவின் மன்னருக்கும் பின்பு சிலநாளின் கண் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருப்பாடல்களுள் திருநொடித்தான் மலைப்பதிகம் நீங்கலாக மற்றையவை ஏழாந் திருமுறைக் காப்புச் செய்யப் பெற்றன.

வாழி மாதவ ராலால சுந்தரர் வழியிடை யருள்செய்த
வேழி சைத்திருப் பதிகமிவ் வுலகினி லேற்றிட வெறிமுந்நீ
ராழி வேந்தனும் வருணனுக் களித்திட வனுமவ் வருள்சூடி
யூழி யிற்றனி யொருவர்தந் திருவஞ்சைக் களத்திலுய்த் துணர்வித்தான்.

சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தவத் திருவுலாப் புறமன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனார் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கு
நார வேலைசூ ழுலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே. (ருஉ)

வெள்ளானைச்சருக்கம்.

இவ்விரண்டு திருவிருத்தங்களையும், 'திருப்பதிகம் இவ்வுலகினில் ஏற்றிட வருணனுக் களித்திட அவனும் அஞ்சைக்களத்தில் உய்த்து உணர்வித்தான்,' 'திருவுலாப்புறம் கைலையிற் கேட்ட மாசாத்தனார் தரித்து வெளிப்படப் பகர்ந்து எங்கும் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே' என்ற சொற்றொடர்களையும் உற்றுநோக்கி நொடித்தான் மலைப்பதிகம் திருக்கோட்டிகள் திருக்கைக்கு எட்டியவாறு உணரப்படும். இவ்வாறு ஏழாந் திருமுறையும் ஸ்ரீ கோசமாயிற்று. இக்காலம் வரை சோழ வரசர்கள் பல்லவ சார்வ பௌமத்தின்கீழ் இருந்தனர். இந் நாட்டில் சகம் எசஎ வரை ஒரு பெருங்குழப்ப முண்டாக, அதன் பின்னர் சோழர்கள் சுவாதீனம் அடைந்தனர். இவ் வாண்டுக்குப் பின் விஜயாலயன், ஆதித்தன் I, பராந்தகன் I,

அரிஞ்சயன், பராந்தகன் II, ஆத்தன் II, ராஜ ராஜன் I என்ற மன்னர் முறையே அரசாண்டனர். அவர்கள் தங்கள் அரசாட்சியின் மத்தியில் இரட்டர், குந்தளர், சாளுக்கியர், பாண்டியர், கங்கர், வாணர், பல்லவர், போசளர் முதலாயினாரோடும் போர் புரிந்து வந்தனர். விஜயாலயனுக்கு முன்னும் பின்னும் நிகழ்ந்த இப்பெருங் குழப்பத்தில் திருக்கை கோட்டிகள் தத்தம் திருப்பணிகளைக் கிரமப்படி செய்து வந்தார்கள் இலர். கணநாதரும் இவ்வரசர்க்கு முற்பட்டவர்தாமே. அந் நாதரைப்போல் திருமுறை எழுதவும் எழுதுவிக்கவும் (தொடி யார் புராணம் ௩, ௪) ஏற்ற பெரியோர் இச்சமயம் இருந்திலர். ஆகவே சிவாலயங்களிலும் திருக்கை கோட்டிகளால் திருமுறைக் காப்புச் செய்து ஸ்ரீ கோசங்கள் பலவிடத்தும் மறைந்தன. இந் நிலைமையில் உத்தம சோழர் முதலிய பல பேரரசர்களால் பேணப்பட்டுத் தம் இளமைப் பருவத்துத் திருப்பதிகங்களைச் சிரவணஞ் செய்த ராஜ ராஜ சோழதேவர் I (சகம் ௬௨௬-௯௩௧) சிவாலய தேவரோடு (சேக்-௨௪) இத் திருமுறைக் கோசங்களைத் தேடலானார். தேடப்புகுந்த அவர்க்கு, திருக்கை கோட்டிகள் களரி வழக்கின் படி மூவர் இலச்சினையோடு சேமித்துவைத்து எஞ்சி நின்ற திருமுறைக்காப்பு இன்னவிடத்துக் கிடைத்தது என்பதும், நம்பியாண்டார் நம்பிகள் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் அதனை இன்னவாறு பெற்றனர் என்பதும் திருமுறை கண்ட புராணம் ௬-௧௩, ௧௬-௧௬, ௨௩ செய்யுட்களால் நன்கு விளங்கும்.

1905ம் ஸ்ரீ ஜுன்மீ'ல் விவேகபாநு நாலாவது பகுதி 6வது தொகுதி 272வது பக்கத்தில் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 29வது வரை (சகம் ௬௫௫) திருத்தஞ்சை ராஜ ராஜேஸ்வரத்து எழுந்தருளுவித்த நம்பியாரூரானார் நங்கை பாவையார் திருநாவுக்கரையர் திருஞானசம்பந்த அடிகள் முதலிய பிரதிமங்கள் ஏழினையும்பற்றி அவ்வாலயத்து மேலாவரண முதன் மாடத்தின் கண் வரைந்துள ஒரு சாதனத்தைப் பிரசுரித்துள்ளேன். அதனோடு பொருத்தி ஸ்ரீகாழியில் திருஞானசம்பந்தர் திருக்கோயில் கர்ப்பக்கிரகத்தின் தென்பக்கம் மேல் பாகத்தில் குலோத் துங்கசோழ தேவர் III (சகம் ௧௧00-௧௧௩௮) காலத்

துப் பொறித்துள்ள சாசனத்தை உற்று நோக்கின் திருக்கை கோட்டிகள் திருமுறைகளை எழுந்தருளுவிக்கும் கிரமம் விளங்கும். அச்சாசனமாவது:—

திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு சவது இராஜ இராஜ வளநாட்டுத் திருக்கழுமலநாட்டு பிரமதேசம் திருக்கழுமலம் கற்கடக நாயற்று முதல் கிராமகாரியஞ் செய்கிற பெருமக்களோம் ஆளுடைய பிள்ளையார்த் திருமாளிகைத் தமிழ் விரகர் கண்டு இக் கோயிற் றிருக்கைகோட்டியில் எழுந்தருளி யிருக்கிற திருமுறைகள் திருக்காப்பு நீக்கி அழிவுள்ள எழுந்தருளுவிக்கும் திருமுறைகள் எழுந்தருளுவித்தும் திருமுறை பூசித்து இருக்கைக்கு காசு கொள்ளா இறையிலியாக இட்டநிலம் இவ்வூர் சண்டேச்வர வதிக்கு கிழக்கு நின்றான் வாய்க்காலுக்கு வடக்கு முதற்கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து கீழ் இறையாங் குடியால் பாரத்து வாசி ஸ்ரீகாழி நாடுடையான் திருவன்னியுடையான் நிலத்து விலை.................. இந்நிலம் இருமாவரை அரைக்காணி முந்திரிகை () எல்லையும் குளமும் கழிக்கடைதெகொழிநபிதன உ௰ குடியிருப்புத் திடானிலமும் சுத்தமலி வதிக்கு மேற்கு நின்றான்............ யக்காலுக்கு வடக்கு முதற் கண்ணாற்று ௩ச திரத்து பாலர் ஸ்ரீநடச தேவன் இனனிலத்து வடமேற்கடையப் புன்செய் நிலத்து உடைய புன்செய் நிலம் அரைமா.........ம் உள் படக்கைக்கொண்டு சந்திராதித்தவரை காசு கொள்ளா இறையிலியாகவும் சிஸ்வரி பெருவரி வெட்டி முட்டையான் கொள்ளாதே மாகவும் சொன்னோம். இன்னிலங்கைக் கொண்டு அனுபவித்து திருமுறை திருக்காப்பு நீக்கி இப்படியேம் திருமாளிகையிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க பணியால் ஊற்கணக்கு பட்டன பிறியன் எழுத்து ஸஹையாரில் எழுதிட்டார் பாரத்துவாசி தேவகள் சேனு பதினம் பாடிலன் சிவதேவன் திருத்தோணி புரமுடையான் பாரத்து வாசி தேவன் தில்லைநாயகன் வளஜல நகலி கடிந்து..............மைக்கு பட்டப்பிரியன் எழுத்து வாஜயன் குமரனை திருவெண்காடுடையான் ஹைஜ்யரான மைக்குப் பட்டப் பிரியன் வாஜல

அருக்கனருளுடையான் பாலர் ஸ்ரீ யனகுமரன் நீலகண்டன் பாலர் ஸ்ரீயன் வாஜலன் தேவன் திருத்தோணி புரமுடையான் ஸைஜநாதன் மைக்கூட்ட பிரியன் சாபாந்தி செனதன வீர பத்தரன் ஸெஜ கொதனனமக்கும் பாரத்துவாசி மாதேவன் திரு வக்கீஸ்வரமுடையான் ஸைஜ நாதனமைக்கு பட்ட பிரியன் பிரளய விடங்க தேவன் மாடிலன் சிவதேவன். சலேந்திர மவுலி ஆஸ்த்ரயன் சூரிய தேவன் கோலமாகி நின்றான் திருச்சிற்றம்பல முடையான் ...... ஜநாதன்மைக்கு நானூற்றுவப் பிரியன் வாச்சியன் குமரன் பொரிவா ஜலநாதன் குமரன் பாரதாயன் மதிசூதன் திருவெண் காடுடையான் பாரத்துவாசி மாதேவன் பிரளய விடங்கன் மாடிலன் மாதேவன் திருவனந்தீச்சு......... சேதிகானமைக்கும் ஆதி நாற்பத்தெண்ணாயிர நம்பி வாச்சியன் நக்கன் அக்குடையான் திருவையாறுடையான் ஆரவா......... இஷஜ தேவன் கவுணியன் தேவன திருச்சிற்றம்பலமுடையான் ......திருச்சிற்றம்பலமுடையான்''

(அடிசிற—எழுத்த)

இவ்வாறு பல காலங்களில் பல பெரியோர்கள் திருமுறைகளையெழுதிவந்தமையின், அவற்றுள் பதிகங்களின் பாடாந்தரங்கள் ஏற்பட்டன. எனினும் அவற்றால் பெருமையும் பொருளும் வேறுபடுவன வெகுசில பிரதி பேதங்களே. இனியும் சம்பிரதாயப் பெருமை பிறழாவண்ணம் ராஜ ராஜ தேவர்-I நன்பிகளது திருவுளப் பாங்கின்படி பதினொரு திருமுறைகளையும், சம்பிரதாயப் பொருள் பிறழாவண்ணம் குலோத்துங்க சோழ தேவர்-I (சகம் கூகூஉ-க0சஉ) சேக்கிழாரது பரமேதிகாசத்தை அவராணை பெற்றுச் சேர்த்துப் பன்னிரண்டு திருமுறைகளையும் வகுத்து வைத்தருளினார்கள். இவர்களின் பின் இராஜ தேவர் III (ககஙஅ.எ0) காலத்து மெய்கண்ட பரம்பரை இவற்றின் விசேஷ தத்துவார்த்தங்கள் விளக்கமாம் வண்ணம் இற்றைக்கு எழுநூற்றொரு வருஷங்களுக்கு முன் தொடங்கிற்று. இக்காரணங்களால் சைவ சம்பிரதாயம் ஓர் சிறந்த வரையுட்பட்டு சற்றும் அங்கும் இங்கும் பிறழாவண்ணம் நிலை பேறுடையவாயின.

(தொடரும்) P. A. முத்துத்தாண்டவராய பிள்ளை.

வடமொழி பொது மொழியா?

வடமொழி என்ற சொல் வடநாட்டிற்குரிய மொழி என்று பொருள்படும். பொதுமொழி என்ற சொல் பலநாட்டினர்க்கு அல்லது பல்வகை மக்கட் பிரிவினர்க்குப் பொதுவாயமொழி என்று பொருள்படும். வடமொழி வடநாட்டிற் குரியவாது மொழியாகவிருந்து பல்வகை மக்கட்பிரிவினர்க்கும் பொதுவானது என்பது உண்மையானல் அதனை வழங்கும் பல்வகை மக்கட் பிரிவினர்க்கும் அது பொதுமொழியாமென்று கூறலாம். உலகினர் யாவருக்கும் பொது மொழியானல் அதனைப் பொது மொழி என்று அடைமொழியில்லாது கூறுதல் ஒக்கும். இனி அது சிலர்க்குப் பொதுமொழியா? பலர்க்குப் பொது மொழியா? உலகினர்க்குப் பொது மொழியா அல்லது இவ்வுலகிற்குமாத்திர மேயன்றி விண்ணுலகிற்கும், புவனதிகட்கும் பொதுவாய மொழியா? அங்ஙனம் பொது மொழியாக முன்னே இருந்ததா? இப்போது இருக்கிறதா? இனி இருக்குமா? என்னும் கேள்விகளுக்குத் தலைப்பின் கண்ணுள்ள வினு இடந்தருகின்றது.

ஒரு மொழியானது உலகத்திற்கும் புவனதிகட்கும் விண்ணுலகிற்கும் பொதுவாயிருக்குமாயின் சிறப்பாக அது வடமொழி என்று கூறப்படுதல் யாங்ஙனம்? பொது மொழி என்ற பெயரன்றே அதற்குச் சிறப்புப் பெயராக விருத்தல் வேண்டும். வடமொழி என்ற பெயர் சிறப்பாகத் தென்றமிழ் நாட்டிலே ஆரியத்திற்கு வழங்குதலின் அந்நாட்டிற்கு வடக்கிலேயுள்ள நாட்டில் வழங்கியமொழி அஃதாமென்று சொல்லாமலே அமையும். தமிழ் நாட்டிற்கும் வடநாட்டிற்கும் தொன்று தொட்டுப் பொது மொழியாக அஃது இருந்திருப்பின் அது தமிழ் நாட்டிலே பொது மொழி யென்னப்படுமேயன்றி வடமொழி என்னப் படாது. எந்நாட்டிற்கும் பொதுமொழி யொன்றிருப்பின் எந் நாட்டினரும் அந்த ஒரேமொழியினை வழங்குவார்களே யன்றி தனித்தனி மொழிகளை உடைத்தாயிருத்தல் யாங்ஙனம்? உலகத்திலுள்ள எம்மொழியும் ஆரியத்தின் கிளைமொழியாக வன்றே இருத்தல் வேண்டும்?

ஈண்டு தமிழ்மொழி தனிமொழியோ? ஆரியத்தின் கிளை மொழியோ? என்பது ஆயத்தக்கது. தமிழ் மொழி தனிமொழி என்பது யார்க்கும் ஒப்பமுடிந்த தொன்று. ஆசிரியர் சிவஞான சுவாமிகள் "தமிழ் ஆரியம் என்னும் இருமொழியும் வெவ்வேறு இயல்புடையன; வெவ்வேறு இலக்கணங்கள் உடையன" என்று அறுதியிட்டு உறுதி கூறுகின்றார். உலகத்திலுள்ள பல் வேறு மொழிகளையும் அவற்றி னிலக்கணங்களையும் ஆராய்ந்து அவற்றினை ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து முடிவு கட்டும் மேற்றிசை மொழி நூற்புலவரும் 'திராவிட மொழிகள் வேறு; ஆரிய மொழிகள் வேறு. வட இந்தியாவிலுள்ள கிளைமொழி களுக்குத் தலையாயது ஆரியம்; தென்னிந்தியாவிலுள்ள கிளை மொழிகளுக்குத் தலையாயது தமிழ்' என்று கூறினமையின் தமிழ் மொழி தனிமொழி என்பது தெளிவு. தமிழ்மொழி தமிழ் நாட்டிற்குரியதாகவே ஆரியமும் தமிழ் வழங்கியநாள்தொட்டுத் தமிழகத்தே ஒரே வகையான மக்கள் நடுவே வழங்கியிருக்கு மாயின் இருவேறு தனிமொழிகள் தொன்று தொட்டு ஒரே நாட்டில் வழங்குதல் யாங்ஙனம்.? ஆரியம் வடமொழி யென்றும் தமிழ் தென்மொழி யென்றும் தொல்லாசிரியோர் பல்லாறு னும் வழங்கப் பட்டமை யாது காரணம்பற்றி? இவ்வினுக்கட்கு வடமொழி பொது மொழி யென்பார் பொருத்தமுற விடைகூறு தல் இயலாமையின் வடமொழி வடநாட்டில் முதலில் வழங்கிய தென்பதை அன்னோருக்கு மறுத்தலியலாது. பொது மொழி யாய வடமொழியின் கிளைமொழியென்று தமிழைக் கூறுதல் அறிவுடையார் நகையாடற் கேதுவாம். ஆதலின் வடமொழி வடநாட்டிலுள்ள மக்கட்பிரிவினரது மொழி யென்பதே போத ரும். அவருடைய மொழி இந்நாட்டில் அவர் நூல்கள் வாயி லாய் வழங்குதல்பற்றி அஃது இந்நாட்டிற்கும் பிற நாட்டிற்கும் பொதுவாயமொழி என்பது எவ்வாறு பொருந்தும்? வடநாட்டி லுள்ள ஹிந்தி, பெங்காலி, பஞ்சாபி முதலிய மொழிகளே ஆரி யத்தின் வழிவந்தன. நளன்கதை பாரதத்தே கூறப்பட் டுள்ளது. பாரதத்திற்கு முந்திய வடநாட்டரசனாகிய நளன் காலத்திலே மனுஸ்மிருதி (2-ம் அதி. 21, 22)க் குரியவண்

ணம் இமய மலைக்கும் விந்தியத்திற்கும் நடுவேயுள்ள நாடே உயர்தர மக்களாகிய ஆரியர் வாழ்தற்குரிய நாடென்றும் அதற் கப்பாற்பட்ட தேசம் மிலேச்சர் வாழும் நாடென்றும் கருதப்பட்டமையாலே கிளைமொழிகள் பல வழங்கிய பாஞ் சாலம், மச்சதேசம் குருச்சேத்திரம், முதலிய பல ஆரிய மாகாணங்களுக்குப் பொதுவாக ஆரிய மொழி வழங்கி வந்த தென்பதே நைடத வாசிரியர் கருத்தென்று கொள்ளப்படு மேயன்றி உலகெங்கணும் வழங்கிய மொழி ஆரிய மொழி யென்று கொள்ளச் சிறிது மிடமில்லை. சீன தேசத்திலும் அரா பியா தேசத்திலும் ஆப்பிரிக்கா கண்டத்திலும் அமெரிக்கா கண்டத்திலும் வடமொழி பொது மொழியாக எப்பொழுது வழங்கிற்றோ தெரியவில்லை. சுவர்க்க முதலிய வற்றிலுள்ள விண்ணவர் மொழி ஆரியமென்றால் அவற்றிற்கு மேற்பட்ட கைலாயத்திலே பேசப்பட்ட மொழி தமிழ்மொழி என்று கூற லாம். சேரமான் பெருமாண் நாயனார் திருக்கைலாயத்திலே ஞானவுலாவைத் தமிழிலேயே செய்தாராதலின் ஆரியம் விண்ண வர்க்குரிய மொழியென்று கூறத் தெளிவான ஆதாரம் யாது? சொல்லின் உதவியின்றியே நினைப்பின் வாசிக்கும் மக்கள் தாமே பிறர் உள்ளத்திலுள்ள வற்றை அறியக்கூடுமானால் அவற் றினுஞ் சிறந்த தேவர்க்கு வடமொழித் துணை எற்றுக்கோ? நை டத காலத்திலே ஆரியவர்க்கத்திலே பல மாகாணத்தினர்க்கும் ஆரியம் பொது மொழியாயிருந்த தெனின், அவ்வாறே நெப்போ லியன் காலத்திலே ஐரோப்பா முழுவதும் பிரஞ்சு மொழி பொதுமொழியாக விருந்தது. தற்காலத்திலே பிரிட்டிஷ் அரசாங்க முழுவதும் அமெரிக்காவில் ஐக்கியநாடு முழுவதும் இந்தியா, ஜப்பான், சீனா முழுவதிலும் ஆங்கிலமானது உலக வழக்கழிந் தொழிந்த மொழியா யல்லாமல் பேசு மொழியாக விருத்தலினாலே ஆங்கிலம் தற்காலத்திலே பன்னாட்டினுக்கும் பொது மொழியென்று கூறும் பெருமையுடையது. சீனர்கள் தம்மை வானவர் என்று கூறுதலானும் இந்தியாவிலுள்ள நமக்கு நேர் கீழே பூமியின் எதிர்பக்கத்திலுள்ள அமெரிக்கா நாட்டின் பழங்குடிகள் நாகலோகத்தினர் என்று சொல்லுதற்கு இயை

புடைய பாம்பு வழிபாட்டை யுடையவராயிருத்தலினாலும் வான லோகம், பூமி, நாகலோக முதலிய எல்லாவிடத்தும் ஆங்கில மொழி பேசப்படுவதால் அஃதே யிற்றை ஞான்று சிறந்த பொது மொழியென்று ஏன் ஆங்கிலர் பெருமதிப்புடன் கூறிக்கொள்ளக் கூடாது ? வடமொழியாளர் தமிழரிடத்திலிருந்தும் ஏனை நாட்டினரிடத்திலிருந்தும் பலவற்றைத் தமது மொழியுட்கொண்டு அவற்றைத் தாமே முதலில் கண்டது போல நடிக்கின்றனர். ஆனால் ஆங்கிலர் பன்மொழிக் கலைகளைத் தமது மொழியுட் கொள்ளினும் உள்ளதை உள்ளவா றுரைக்கும் மேன்மையுடைய ராதலின் முன்னையோரினும் சிறந்தோராவர்.

மொழிப்பற்று மிகுதியானும் அரசாட்சி காரணமாகவும் ஒருவகை மக்கட் பிரிவினர்க்குப் பொதுவாய மொழியாவது பற்றி அத்தகைய மொழியினை உலகினர் யாருக்கும் பொது மொழி யென்று கூறுதல் ஒருசார்புபற்றிய உயர்வு நவிற்சியே யன்றி உண்மையாகாது. தத்தம் மொழியினைப் பேணுபவர் அவை பலவிடத்தும் பரவியகாலத்து அவற்றை உலகப் பொது மொழி யென்று புகழ்ந்து கூறுதல் இயல்பே. காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு ; அதனாலே புறு காக்கைக் குஞ்சி லிருந்து பொன் எடுத்தல் கூடுமாதலால் காக்கைக் குஞ்சைத் தான் போற்றுதல் வேண்டும். அதை எல்லாரும் போற்றுதல் வேண்டும் என்று குழறிக் களிப்பதனா லென்பயன்?.

தம்மத குருவினை உலககுரு வென்று கூறுவதற்குக் காரணம் அங்ஙனம் கூறுவோர் சமயப்பற்றே யாவதுபோல வடமொழியினரும் ஆரியப் புத்தகப் பித்துக்கொண்ட தமிழரும் ஆரியமொழியைப் பொதுமொழி யென்று போற்றிப் புகழ்ந்து பொய்யுரை புகலின் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பின் அப்பொருள், மெய்ப் பொருள் காணும்' உண்மை யறிவாளர் அப் பிதற்றுரையைப் பொருளெனக் கொள்ளுவது எற்றிற்கு ?

வடநாடு உலகத்தில் முதலில் தோன்றிய நாடு மன்று ; வடமொழி உலகத்தில் எம்மொழிக்கும் முதலில் தோன்றிய

மொழியுமன்று. பதினெண்மொழியும் அண்டமுதல்வன் அமைத்தனவே யென்று திருமந்திரம் கூறுகின்றது. விண்ணவர்களும், புவனாதிகளும், பதினெண் மொழியினரும், பல்வேறு மொழியினரும் எக்காலத்து எவ்விடத்து ஒன்று கூடி தமக்கொரு பொதுமொழி வேண்டுமென்று கருதி அம்மொழி வடமொழியாகச் சமைத்தனரோ அறிகிலம்! அங்ஙனம் சமைத்தல் கூடுமோ என்பது மோர் ஐயமே!

ஆராய்ச்சி வல்லார் மக்கள் வாழ்விற்குரிய முதல் இடம் தென்றமிழ் நாடென்றும், அவர் மொழி தமிழ்மொழி யென்றும் ஊகிக்கின்றனர். எம்மொழிக்குந் தாய் மொழி ஒன்றிருப்பின் அது தமிழ் மொழியாயிருந்திருத்தல் கூடுமென 'சதுர்மறை யாரியம் வருமுன் சகமுழுதும் நினது' என்று ஓர் பெரியார் கூறிப்போந்தனர். அஃதெவ்வாறாயினும் தமிழர்க்கு அவர் உயர்மொழியாகிய தமிழ் மொழி யொன்றே பயன்றருவது.

எக்கலையும் தமிழ் மொழியிலே எழுதியறியப்படுந் தன்மையது. தமிழர் யாவரும் தமிழ் மொழி கற்றல் இன்றியமையாதது. அன்னிய மொழியில் அவிரோதமாயுள்ளதும் தமிழிற் கொள்ளப்படுவதே. தற்காலப் பொதுமொழி ஆங்கிலமே. ஆதலால் வடமொழி பொதுமொழி என்று பிதற்றும் வெறுமொழியும் நமக்கு வேண்டா. வடமொழியிலே யுள்ள கலைகள் மாத்திரமல்ல; வடமொழியிலில்லாத பலகலைகளோடும் சிறந்து விளங்கும் பெருமையுடையது நமது தமிழ்மொழி. முச்சங்கத்தார் வளர்த்ததும் தமிழ் மொழி; மூவேந்தர் வளர்த்ததும் தமிழ் மொழி ; பிற மொழிகளி னுள்ளவற்றைத் தமிழிற் கொண்டனரேயன்றி தமிழ் போல பிற மொழியைப் பண்டைத் தமிழர் வளர்த்தனரல்ல. வடமொழி முதலிய பல மொழிகளுக்கும் பல கலை உதவினதுந் தமிழே. ஆதலின் 'வடகலையல பலகலையொடு தமிழ் வளருங்கூடல்' என்றார் குமரகுருபர சுவாமிகள். 'வடகலை யொழிந்து பலகலையொடுந் தமிழ் வளர்ந்த கூடல்' என்பாரும் உளர்.

இதுகாறுங் கூறியவாற்றல் வடமொழி ஒரு சார்பினர் நூல் மொழியே என்பதும் உலகிற்குப் பொதுமொழியா யொரு நாளும் இருந்ததில்லை, இருக்கின்றது மில்லை, இருப்பது மில்லை என்பதும் தமிழர் போற்றற் குரிய உயர்தனிச் செம்மொழி தமிழ் மொழியே என்பதும் வெள்ளிடைமலைபோற் றெள்ளியவாகும்.

இங்ஙனமாகவும் குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த 'மதுரைக்கலம்பகம்' 78வது செய்யுளுக்கு உரைகாண்பார் புனைந்துரை கூறிக் களியாது மேற் கூறியவற்றின் பொருள் கொண்டு உண்மைகண்டு தெளிவாராக!

கோவிந்தன்.

சைவ சகோதரர்கட்கு

ஒரு விண்ணப்பம்

ஐயன்மீர்!

ஆன்மாக்கள் தத்தம் பக்குவத்திற்கேற்ப இறைவனை வழிபட்டு மேனெறிச் சென்றுய்யுமாறு அவனருளால் பற்பல சமயங்கள் தோன்றி நின்று நிலவின; நிலவுகின்றன. அவற்றுள் நஞ் சைவ சமயமானது முதன்மை பெற்றதெனவும், சமயங் கடந்த மோன சமரச நெறியாக விளங்குவதெனவும் மதித்தற்குரியதாயுள்ளது. ஒன்றோடொன் றுறவ் வாமல் உள்ள பல சமயங்கள், பொருள்கள், நூல்கள் இவையெல்லாம் நீதியினல் தன்னிடத்தே காண நிற்பதே வைதிக சைவத்தினழகென ஆன்றோர் வியந்து கூறுவர். ஆண்டவனிடத்தும் உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி இன்படைதலையே தன்னுயிர் நாடியாகக் கொண் டுள்ளது இச்சமயம். தொன்மையாலும், மெய்ந் நூல்களாலும் சமய குரவர்களாலும், சித்தி முத்தி சேர்ந்த மற்றைப் பெரியோர் பலராலும் அளப்பருஞ் சிறப்புப் படைத்த இச் சைவசமயம், இந்நாளில் தன் மேன் மைக்கும் மெய்ம்மைக்கும் ஏற்ற அளவில் மக்கள் வாழ்க்கையிலும் நினை விலும் நிலைபெற்று நின்று தன் னருளாட்சி புரியவில்லை. இதனுற் பொதுவகையில் உலகிற்கும் சிறப்புவகையில் சைவ சமயிகட்கும் விளைந் துள்ள தீமைகள் மிகப் பல.

எல்லாச் சமயங்களும் முடிவில் இறைவன்பா லுயிர்களைக் கொண்டு சேர்ப்பனவாதலால் அவையாவும் தத்தம் உண்மை நெறியில் நின்று

தம்மைப் பின்பற்றுவோரை நலமுறச் செய்து விளங்குதலே இயல்பான நிலைமை. பிற சமய சகோதரர்கள் பலரும் இக்கடமையை யுணர்ந்து தத்தஞ் சமயவொளி மங்கா வண்ணம் பாதுகாத்து வருகின்றனர். பிற சமயத்தவரைத் தம்மதத்திற் சேர்த்தலுங் கடமையெனச் சில சமயத்தார் கொண்டு ஆயிரக்கணக்காக நம்மவரைத் தம் மதத்திற் சேர்த்தும் வருகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளை நம்மனோர் பலர் நாடோறுங் கண் கூடாய்க் கண்டும், தஞ்சமயக் கடமை உணராது எளிய நோக்கிலும் வாழ்விலும் இன்புற்றிருக்கின்றனர். எச்சமயமும் வாழவிரும்பும் சைவர் தஞ்சமயமட்டுந் தாழப் பார்த்திருத்தல் தகுதியாமோ? இன்னுஞ் சிறிது காலம் இங்ஙனமே நாம் வாளா கிடப்போமாயின், நஞ் சமய சத்தி நூலளவில் ஒடுங்கிவிடும். நம் முன்னோர் பேணிவளர்த்து நம்மிட மொப்பித்த அரும்பெறற் செல்வமாகிய நஞ் சமயத்தையும் அதன் அமைப்புக்களையும் போற்றாது பொன்ற விட்ட பாவம் நம்மைச் சூழும். நம் பின் சந்ததியார் நிந்தனைக்கும் ஆளாவோம். ஆண்டவன் திருவருளுக்கும் அயலாவோம்.

இதையுணர்ந்த நஞ்சமய சோதரர் சிலர் ஆங்காங்கு சைவசபைகளை உண்டாக்கி ஒல்லும் வகையால் சுருங்கிய வளவில் சமயத்தொண்டு இயற்றி வருகின்றனர். பல காரணங்களால் நஞ்சமயத் திருக்கோயில்கள் திருமடங்களிற் பல தத்தம் உயர் நிலையில் நின்று வழுவி நம்மவர்க்குப்போதிய உதவி செய்யத் தவறினமையாலும், புறமதப் படையெடுப்பாலும், நம்மனோர் சமயாபிமானக் குறைவாலும் சைவசமயத்தின் ஆற்றல் பெரிதுங் குன்றியுள்ளது. இக்காலத்தில் சமயக் கடமை யுணர்ந்த சைவ சகோதரர்கள் தத்தம் தொண்டுகளை ஒன்று சேர்ந்து செய்தால் மிக்க நன்மை யுண்டாகும். இதன் விவரம் பின்போர்கால் விளக்கப்படும். நம்மவர்க்கு நஞ்சமய உண்மையை உணர்த்துதற் கேனும் பிரசாரவேலை ஒழுங்குபெற இனி நடைபெற வேண்டுவ தவசியம். அதன் மேலுஞ் செய்ய வேண்டிய வேலைகள் பலவுள. இவ்வுண்மைகளை யுணர்ந்து பெருந் தொண்டுகள் புரிந்து வருமேலோர் சிலர் இப்போதும் நம்மிடை இருந்து வருகின்றனர். அவர்களோடு சேர்ந்து அவர்களை ஊக்குவதும் இயன்ற உதவி செய்வதும் மற்றைச் சகோதரர் கடமை.

இஃதிங்ஙனமாக, தமிழுஞ் சைவமுஞ் செய்த தவப்பயனாய்த் தோன்றித் தமிழ் நாட்டின் பல விடங்கட்குச் சென்று சமயஞானத்தை ஊட்டியருளும் திருப்பாதிரிப்புலியூர் **ஸ்ரீமத் சிவசண்முக மெய்ஞ்ஞான**

சிவாசாரிய சுவாமிகள், இக்காலத்துக்கு வேண்டிய பிறிதொரு துறையிலும் உபகரிக்க முன் வந்துள்ளார்கள். சமயப் பிரசாரத்தொண்டு நிகழ்தற்கு ஒரு வருடச் செலவிற்காக ஐந்நூறு ரூபாய் தங்கள் திருமடத்திலிருந்தே அளிப்பதாக வாக்களித்து, பிரசாரத்தை நிகழ்த்துவிக்கும் பொறுப்பை ஒரு சபையினரிடம் ஒப்பித்தார்கள். இச் சபையினர். ஒரு பிரசாரகர் மூலமாக இப்பணியை நிறைவேற்ற விரும்பித் தக்க ஒருவரைத் தேடியுங் கிடைக்கப் பெறாமையால், சமய சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுச் சைவநாட்டிற் பல விடங்களிலும் பரப்பத் தீர்மானித்தனர்.

"சைவப் பிரசார சபையினர்" செய்த தீர்மானத்தின்படி விரைவில் பல துண்டுப் பிரசுரங்கள் வெளிவரும். அவற்றைப் பயன்பட வழங்குவதற்கு ஆங்காங்குள்ள சைவ சபையினரின் ஒத்துழைப்பு தேவையாயிருக்கின்றது. ஆதலால் இம்முயற்சியிற் பற்றுள்ள சைவ சகோதரர்க ளியாவரும் தத்தம் மிடங்களிலுள்ள சைவ சபைக் காரிய தரிசியார் மூலமாகத் தங்கள் சபைகளின் பெயரையும் முழு விலாசத்தையும் ஷெ சைவப்பிரசார சபையின் காரியதரிசிக்குத் தெரிவிக்கும்படிக்கும், பிரசுரங்கள் கிடைத்ததும் அவற்றின் பொருள் நம்மெளிய சகோதரர்கட்கு நன்கு விளங்குமாறு பிரசுரங்கள் செய்து அவற்றைப் பல விடங்களிலும் பரப்பும்படிக்கும் வேண்டிக்கொள்ளுகிறேன். அன்றியும் தத்தம் சபைகளிலும் அடுத்துள்ள இடங்களிலும் சமயச் சார்பாய் நடக்கும் விசேடச் செய்திகளை அவ்வப்போது ஷெ பிரசார சபை காரியதரிசிக்குத் தெரிவித்து வருமாறு விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நன்னோக்கோடு தொடங்கப்பெறும் இம்முயற்சி விரைவில் மேலோங்கி நிலைத்து அதிக நன்மை பயக்கச் செய்யுமாறு, "வேண்டுவார் வேண்டுவதே" ஈயும் சிவபரம் பொருளை வேண்டும்படிக்கும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் : அடியன்,

ச. சச்சிதாநந்தம் பிள்ளை,

சைவப்பிரசாரசபைக் காரியதரிசி.

காரியதரிசியின் விலாசம்:

ச. சச்சிதாநந்தம் பிள்ளை, B.A., L.T.,

26. ஜோன்ஸ் ரோட், சைதாப்பேட்டை P.O.

குறிப்புக்கள்

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சங்கத்தின் *குற்றாலம் சாரற் கால மகாநாடு

(Courtallam Season Saiva Siddhanta Conference)

இச் சைவ சித்தாந்த மகாநாடு நாளது ஆனித்திங்கள் 7, 8, 9-ந்தேதி (ஜுன் 20, 21, 22-ந் தேதி) வெள்ளி, சனி, ஞாயிறுகளில், சென்னை சட்டகலாசாலைப் பேராசிரியரும், கல்கத்தா தாகூர் சட்டப்பெரும்புலவருமான திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் (எம். ஏ., எம். எல்.) தலைமையின்கீழ் குற்றாலம் கோயில் முன் மண்டபத்தில் மிக இனிதே நிறை வேறியது.

முதல்நாள் தேவாரம் ஓதி சபை தொடங்கப் பெற்று தலைவரவர்கட்கு வரவேற்பு அழகிய உரையில் அமைத்து அளிக்கப் பெற்றதும் தலைவரவர்கள் முன்னுரையாக சைவம், சுமார்த்தம், வைணவம் முதலிய சமயங்களின் ஒற்றுமை வேற்றுமைகளைத் தக்க நூற் சான்றுகளுடன் இனிது விளக்கிச் சபையாரைப் பெரிதும் மகிழ் வித்தார்கள். பின், சிறந்த புலவர்களாகிய திருவாளர்கள் ம. ரா. குமார சுவாமிப் பிள்ளையவர்கள், (திருக்கோவலூர்) ந. சிவகுருநாதபிள்ளையவர்கள் (தூத்துக்குடி) இவர்கள் முறையே 'நமது சங்கம்' 'சித்தாந்தச் சிறப்பு' என்னும் பொருள்கள் பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பின் தலைவரவர்கள் கேட்போர் மகிழும் வண்ணம் சொற்பொழிவுகளின் நயம் விளங்குமாறு மிக அழகாய் முடிவுரை கூறினார்கள். பின் தேவாரம் ஓதிசபை கலைந்தது.

மறு நாட்காலை தேவாரம் ஓதி சபை தொடங்கப்பெற்று, "சைவ சமயவளர்ச்சிக்காக நாம் செய்ய வேண்டிய வேலை யாது?" என்னும் பொருள் பற்றிக் காரைக்குடி குமரன் உப பத்திராதிபர் திருவாளர் அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் கேட்போர் உள்ளங் கரையுமாறு மிக ஆர்வத்தோடு ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதை ஆமோதித்து அன்பர்கள் சிலர் பேசி முடித்ததும் தலைவரவர்கள் திரு. செட்டியாரவர்களைப் போன்ற இளைஞர்கள் இதுவரை நம் தமிழ் நாட்

---

* இம்மகாநாடு ஆண்டுதோறும் கூட்டப்பெறும். அக்காலங்களில் அன்பர்களனைவரும் ஆங்குவந்து உடம்பிற் குறுதியும், உயிர்க்குறுதியுந் தேடுவார்களாக !

டில் இவ்விதம் ஆர்வத்தோடு பேசியதைக் கேட்டதே யில்லை என்று கூறியது மன்றி இவர்களைப்போல் இன்னும் சிலர் தோன்றுவார்க ளாயின் அதுவுந் தமிழுலகிற்கு ஒரு பெரும்பேறு என்று கூறி சபை யாரை மகிழும்படி செய்தார்கள்.

பின்மாலை தேவாரம் ஓதி சபை தொடங்கப் பெற்றதும் சிறந்த புலவர்களாகிய திருவாளர்கள் ராய. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்கள் (காரைக்குடி), ம. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள் (திருக்கோவலூர்), வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள் (சிந்துபூந்துறை) இவர்கள் முறையே சமயபரிபாலனம், ஞானசம்பந்தர் நற்கருணை, சமயமும் சாதி யும், சிவஞானபோதக் கருத்துரை என்னும் பொருள்களைப் பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவரவர்கள் குறித்த சொற்பொழிவுகளில் அமைந்த பொருள்களை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் கேட்டாரைப் பிணிக்குந் தகையதாய் எடுத்துரைத்தார்கள். பின் தேவாரம் ஓதி சபை கலைந்தது.

மூன்றாம் நாள் தேவாரம் ஓதி சபை தொடங்கப்பெற்றதும் திருவா ளர்கள் சிதம்பர நாதபிள்ளை யவர்கள் (திருநெல்வேலி) S. முத்துக்குமார சாமியா பிள்ளையவர்கள் (குலசேகர பட்டினம்) த. ஆறுமுகநயினார் பிள்ளையவர்கள் (பேட்டை) அரு. சோம சுந்தரஞ் செட்டியாரவர்கள் (காரைக்குடி) ம. ரா. குமாரசாமியாபிள்ளை யவர்கள் (திருக்கோவலூர்) இவர்கள் முறையே 'ஐந்தெழுத்து' 'இளையான் குடிமாற நாயனார்' 'மக்கள் கடமை' 'சுந்தரர் தேவாரம்' 'பதிபுண்ணியம்' என்னும் பொருள்கள் பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவ ரவர்கள் முடிவுரையாக விரிவுரைகளின் சாரங்களைத் திரட்டி இனிது விளக்கிச் சபையாரை மகிழ்வித்தார்கள். பின் தேவாரம் ஓதி சபை கலைந்தது.

நான்காம் நாட் காலை 9-மணி முதல் 11-30 வரை தலைவரவர்கள் வேதாகமத்தின் பொருள்களையும் தமிழ்மக்கள் அறிய வேண்டிய சமய உண்மைகளையும் இதுவரை எவரும் இந்த முறையில் விளக்கினார்க ளில்லையே யென்று வியக்கும்படி சொற்பொழிவு நிகழ்த்திச் சபையா ரைப் பெரிதும் மகிழ்வித்தார்கள். பின் தேவாரம் ஓதி சபை கலைந்தது.

பின் 28-6-24 சனிக்கிழமை ஷ சங்கத்தின் சார்பாகக் குற்றாலம் கோயில் மண்டபத்தில் மறைத்திருவன், சுந்தர ஓதுவா மூர்த்தி அவர்கள் 'நந்தனார்' என்னும் சிவபத்தர் சரித்திரத்தை இன்னிசைக் கருவிகளுடன் இனிது நடத்தினார்கள். மாலை 3½ மணிக்குச் சரித்திரம் தொடங்கி இரவு

9½ மணி வரை நடந்தது. பல ஊர் அன்பர்களும் வந்து குழுமியிருந்தார்கள். ஓதுவா மூர்த்திகளின் சொல்லாற்றல், பொருளாற்றல், இன்னிசைக் குரல் முதலியன வெல்லாம் ஒருங்கமைந்து விளங்கினமையால் கேட்பார் உள்ள முருகி இறுதிவரை இருந்து கேட்டுப் பேரானந்தப் பத்திக் கடலில் ஆழ்க்கும்படி செய்து விட்டது. இவர்கள் வாழ்ந்து சிறக்கும்படி சபையார் வழுத்தினார்கள்.

தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம்

(திருநெல்வேலி)

நாளது, ௰அஉ மாலை 6 மணி முதல் 10 மணிவரை, இவ்வூர் தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சங்கக் கட்டிடத்தில், பல அறிஞர் குழாத்திடையில், காரைச் சிவனடியார் திருக்கூட்டத்து அங்கத்தினர்களான திருவாளர்கள், கா. கா. அள. காளையப்பசெட்டியா ரவர்களும், சேவு. மெ. மெய்யப்பசெட்டியா ரவர்களும், முத்த. வெ. சொக்கலிங்கச் செட்டியா ரவர்களும் முறையே, செந்தமிழ்ச் சிறப்பு, மாணிக்கவாசகர் திருநாள், அப்பூதி யடிகள் சரித்திரம் என்னும் பொருள்பற்றி, அன்பு ததும்ப நீண்டதோர் விரிவுரை நிகழ்த்தினார்கள். ௸ சங்கத்தலைவர் திருவாளர், M. V. நெல்லையப்பபிள்ளை யவர்கள், B. A. வந்தனோபசாரங் கூறச் சபை இனிது நிறைவெய்தியது.

(குற்றாலம்)

நாளது, உ௩உ மாலை 4 மணிக்குக் குற்றாலம் கோயில் திருமண்டபத்தில் சைவ சமயாசாரிய சுவாமிகள் நால்வரில் ஒருவராகிய "ஸ்ரீமந் மணிவாசகப் பெருமான்" திருநாளை முன்னிட்டுத் தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சங்கத்தின் சார்பில் திருவாளர், திவான், S. T, சண்முகம்பிள்ளை யவர்கள் அக்கிராசனத்தின் கீழ், காரைச் சிவனடியார் திருக்கூட்டத்து அங்கத்தினர்களான, திருவாளர்கள், கா. கா. அள. காளையப்பசெட்டியா ரவர்களும், சேவு. மெ. மெய்யப்பசெட்டியா ரவர்களும், தன வைசிய ஊழியன் பத்திராதிபர், ருய. சொக்கலிங்கச் செட்டியா ரவர்களும் நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தார்கள். திருக்கோயிலிலும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடத்திலும், குருபூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

Printed at the Sivakami Vilasam Press, Published by V. Subbiah for the S.I.S.S.W.P. Society Ltd., 306, Linga Chetty St. Madras.

அரிய நூற்கள்

திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும்

இதன்கண் நக்கீர தேவர் வரலாறும், பரிமேலழகர் வரலாறும், தோத்திரப்பாக்கட்கு உரையும், ஸ்ரீ முருகப் பெருமான் திருவுருவப்படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புதியபதிப்பு வழுவழுப்பான கடிதம். விலை அணா 12.

பிரபுலிங்கலீலை மூலம்

இது சிவப்பிரகாச சுவாமிகள் அருளியது. யாழ்ப்பாணம் திரு. நா. கதிரை வேற்பிள்ளையவர்கள் எழுதிய குறிப்புரையுடன் வெளிவந்துளது. கலிக்கா கட்டடம் விலை ரூபா. 1.

திருவாசகவிரிவுரை முதற்பாகம்

இஃதியற்றியது பல்லவபுரம் சுவாமி வேதாசலம். இனிய செந்தமிழ் நன்னடை யுடையது விலை ரூபா. 5.

புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும்

மூன்றும் பதிப்பு இப்போது தான் வெளிவந்துளது.

விலை ரூபா. 1 14

Works by J. M. Nallasamy Pillai, B.A., B.L.

1.	Tiruvarulpayan of Umapathisivam	0	6
2.	Sivagnana Siddhiyar	5	0
3.	அத்வைதம் (சைவசித்தாந்தத்தின்படி)	0	3

Works by K. Subramania Pillai, M.A., M.L.
Tagore Professor of Law.

1.	A short Sketch of the Hindu Religions	0	2
2.	A note on the Hindu Religious Endowments' Bill, 1922	0	4
3.	சைவசித்தாந்தவரலாறு	0	2
4.	சைவசித்தாந்த விளக்கச் சுருக்கம்	0	1

Tamilian Antiquary 10 numbers Calico Bound Volume	10	0
Age of Sri Gnanasambandhar	0	12
காசிகாண்டம் உரையுடன்	10	0

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
306, லிங்கசெட்டித் தெரு, சென்னை